நாட்டியம்

Sri Bagh. Library

NOTE: Numbers give musical count; letters refer to accompanying drawings.

COMPLIMENTARY
FROM NATYAM, MADRAS 6.





Petite Variation is danced in Waltz Tempo. The music of Chopin best qualifies for the interpretation of the romantic, lyric style of this dance.

TM 88M

ENTRANCE

Dancer enters upstage left and walks to left of centre (4 bars: 1-2-3; 2-2-3: 3-2-3; 4-2-3)—and on 5th bar

Point L leg in 2nd position, 5-2-3; 6-2-3 (Fig. A)—Close 5th, 7-2-3; 8-2-3 (B)—Porte de bràs: down, 1-2-3; 2-2-3 (C); up, 3-2-3; and open, 4-2-3 (D and B)—and take pose, 5-2-3; 6-2-3; 7-2-3; 8- (E and F) . . .

DANCE

I—Glissade to right, -2-3 (G-H-I)—Double ronde de jambe en dedans, closing 5th, 1-2-3; 2- (J-K-J-K-L-M)—Glissade, -2-3 (G-H-I)—Pique à la 2de, detourné into 1st arabesque, closing 5th, 3-2-3; 4- (N-O-M)—Small jete; frappe; coupe; frappe; coupe; frappe; coupe, -2-3; 5-2-3; 6-2-3; 7-2- (P-Q-P-Q-P-Q-P) into pose, -3-8- (F, feet reversed) — to repeat entire combination (making 16 bars) to other side . . .

II—Passé; developpé; plié, 1-2-3 (R-S-T)—Piqué into arabesque and change to penché (flat), 2-2-3 (U-V)—Detourné into croisé devant, 3-2-3 (W)—Swing leg into arabesque penché, 4-2-3 (X) — Arabesque, 5-2-3 (Y)—Fouetté pirouette en dedans from the arabesque, 6-2-3 (Z)—and finish in 5th position back 7-2- (M)—and straighten, -3-8-2-3 (B) . . .

Then repeat this entire combination to other side, but finish the pirouette, 6-2-3 (Z) in 4th back, 7-2-3-8- (E-F) . . .

III—Repeat first 13 bars of Combination I—then—frappé, coupé, 14-2-—Step across front on L, -3—Piqué in arabesque, 15-2-3 (O) — Close 5th, 16-2-3 (M-B).

ஆசிரியர்: ரங்கசன் ★ NATYAM மே ,1949 அணை 4

नृत्य
INDIAN DANCE

Issued by the Publishers
of
NATYAM
49, Cathedral Road, Madras-6.

Editor:
R. Ranjan, B.A., M. Litt. Dip. Mus.
Formerely Research Fellow
University of Madras.

★

The Publishers of NATYAM are shortly issuing a monthly English Edition entitled "INDIAN DANCE". Indian Dance will contain articles of general interest on all aspects of Art, including lessons on Bharatha Natya and Kathakali, explanations of mudras besides practical tips to dancers and musicians.

The Yearly Subscription	**Rs. 6/-**
Single Copy	**As. -8-**

The first issue will be issued on the first of July 1949.

★

COPIES WILL BE AVAILABLE ONLY FOR SUBSCRIBERS.
TO ENSURE YOUR COPY RUSH YOUR SUBSCRIPTION IN ADVANCE TO:-

The Circulation Manager,

Indian Dance (Nrtya)
Cathedral Post :: Madras-6.

உங்களுக்கு அறிமுகமானது

★

மதராஸ்

பென்ஸில் பாக்டரி

(சிறந்த பென்ஸில் தயாரிப்பவர்கள்)

★

ஹோ & கம்பெனி

(அச்சுத் தொழிலில் வெகு காலமாகப் பெயரும்
புகழும் படைத்தவர்கள்)

★

வி. பெருமாள் செட்டி & சன்ஸ்

(உயர்தர ஸ்டேஷனரி & புத்தக வியாபாரிகள்)

5, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,

மதராஸ்-1.

FROM

★ இம்மணியின் முன்னணி

உலகில் சங்கீதம் முதலியவற்றைப் பயில்வோர் கற்றவற்றை மீண்டும் தாமே நினைவில் வைத்துக்கொள்வதற்கும், அப்யாசம் செய்வதற்கும் மிகவும் உதவும் வகையில் ஆரம்பப் பாடங்கள் அனைத்தும் அடங்கிய பல அழகிய புத்தகங்கள் சுருக்கமாகவும், விரிவாகவும் உள்ளன. இத்தகைய புத்தகங்களின் உதவியால் அப்யசிப்போர் ஆசிரியரிடம் பயின்ற விஷயங்களைச் சிறிதும் ஐயமின்றி நினைவில் வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் நாட்டியக் கலையைக் கற்போருக்கு மட்டும் மேற்கூறிய வகையில் பயன்படக் கூடிய புத்தகம் ஒன்றும் அமைக்கப்பட வில்லை. இதனால் இக்கலையில் விருப்பமுள்ளோர் மிகவும் கஷ்டப்பட்டு இந் நாட்டியக் கலையைக் கற்கவேண்டி யிருக்கின்றது.

ஆகவே மக்கள் நாட்டியக்கலையை மிகவும் சுலபமாகக் கற்பதற்கும், கற்பதை ஐயம் திரிபற நினைவில் வைத்துக்கொள்வதற்கும் உதவும் வகையில் பல படவிளக்கங்களுடன் "பரதநாட்டியப் பயிற்சி" என்ற பகுதி "நாட்டிய"த்தில் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றது.

மேலும் ஓர் ஆசிரியர் உதவியின்றி நாட்டியக்கலையை இப் பரதநாட்டியப் பயிற்சியின் மூலமாகக் கற்க வியலாதாயினும், நாட்டியக்கலையை ஆசிரியரின் மூலம் கற்போர், மீண்டும் தாமே அப்யசிக்கும் பொழுது இப் பயிற்சுயைப் படித்துப் பார்த்தால் அவர்களுக்குச் சிறிதும் ஐயம் முதலியவை ஏற்படா என்பதை யாவரும் அறியலாம். மேலும் மேனாட்டார்களுள் பலர் இத்தகைய பட விளக்கங்களுடன் கூடிய பயிற்சிகள் அடங்கிய பல நூல்களைத் தமது கலை வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்கின்றனர்.

அவ்வாறே நம் தமிழ் மக்களும் நாட்டியக்கலையை மிகுந்த ஆர்வத்துடன் பயின்று தேர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்குடனேயே பல்வேறு அபிநயங்களை விளக்கக்கூடிய பலவகைப் பட விளக்கங்களுடன் "பரதநாட்டியப் பயிற்சி" என்ற பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பயிற்சிக்கேற்ற பல்வேறு அபிநயங்களை விளக்கும் படங்களே அட்டையை அலங்கரிக்கின்றன.

அட்டையை அலங்கரிக்கும் படங்கள் நாட்டியக் கலையைப் பரப்பும் ஒரு மேனாட்டுப் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டவை. இப்படங்களைப் பார்த்தே மேனாட்டார் நாட்டியக்கலையைப் பரப்புவதில் எத்தகைய ஆர்வமுள்ளவர் என்பதை அறியலாம்.

மேலும் இந் நாட்டியத்தால் நீங்கள் அடைந்துவரும் நன்மைகளில் உங்கள் நண்பர்களுக்கும் நீங்கள் பங்கு அளிப்பது அவசியமாதலால் உங்கள் நண்பர்களும் நாட்டியத்திற்காக வெளியே அலைந்து திரிந்து துன்புறுது தத்தம் இல்லங்களிலிருந்தே சுலபமாகப் பெற அவர்களையும் உங்களைப் போல் சந்தாதாரர்களாக்கிச் சிறந்த இன்பத்தை அவர்களுக்கும் அளிப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

நாட்டியம்

பொருளடக்கம்

விரோதி௵ சித்திரை௴ - மே 1949

சதங்கை 1 ● ● மணி 5

	பக்கம்
● இம்மணியின் முன்னணி	170
● உபயகுசலோபரி	172
● அபிநய தர்ப்பணம்	173
● நாட்டிய சாஸ்திரம் — வாஸுதேவ சாஸ்திரி	175
● கனவு — கு. பரமானந்தம்	177
● காலக்ஷேப மோகம் — துரையப்ப பாகவதர்	179
● உங்களுக்குத் தெரியுமா?	180
● நாட்டியப் பயிற்சி — ரஞ்சன்	181
● அருள்மலை நொண்டி — பெ. தூரன்	185
● கலைத்துணுக்கு	187
● கர்வபங்கம் — கன்னி	189
● முத்துஸ்வாமி தீக்ஷிதர் க்ருதி — செம்மங்குடி	192
● கேரள நடனம் — கோபிநாத்	196

குறிப்பு :—மணியில் வெளியாகும் கட்டுரை, கதை முதலியன பிரசுர உரிமை பெற்றவை. இதிலிருந்து எடுத்துப் பிரசுரிக்க விரும்புவோர் எழுத்து மூலம் முன்பாகவே அனுமதி பெற்றுக்கொள்வது அவசியம்.

★ இம் மணியில்

நாட்டிய நூல்களுள் தலை சிறந்த "பரத நாட்டிய சாஸ்திரத்தை" ஆதாரமாகக் கொண்டு அபிநயங்களின் வகைகளை மிகச் சிறந்த முறையில் விளக்கிக் காட்டுகிறார் வாஸுதேவ சாஸ்திரி.

நாட்டியக் கலையைப் பற்றிய விஷயங்களனைத்தையும் மிகச் சுருக்கமாகவும், அழகாகவும், எடுத்துரைக்கும் நந்திகேச்வரரின் "அபிநய தர்ப்பணம்" என்ற வடமொழி நூல் வழக்கம் போல் சீரிய முறையில் தமிழில் பொருள், விளக்கவுரை, மேற் கோள்களுடன் தொடர்ந்து வெளி வருகின்றது.

முற்காலத்தில் அறிஞர் பலர் கால க்ஷேபத் துறையில் மோகங் கொண்டு அதில் ஈடுபட்டதன் காரணத்தையும், தற்காலத்தில் அதன் நிலையையும் எடுத்துரைக்கிறார் துரையப்ப பாகவதர்.

வழக்கம்போல் தீக்ஷிதரவர்களின் க்ருதியைச் சிறப்பாக ஸ்வரப்படுத்தி யுள்ளார் செம்மங்குடி.

உலகில் உள்ள கலைகளுள் மிகப் பிரயாசையுடன் கற்கவேண்டிய நாட்டியக் கலையைப் பயில்வோருக்கு ஆசிரியரிடம் பயின்ற நேரம் போக எஞ்சிய நேரங்களில் தாமே தத்தம் இல்லங்களில் மீண்டும் சரியான முறையில் அப்யசிப்பதற்கு மிகவும் பயன் படும் வகையில் சிறந்த முறையில் எளிய நடையில் மிக விளக்கமாகப் பலவகைப் பயிற்சிகளுடன் வெளிவரும் பரத நாட்டியத்தின் எட்டாவது பயிற்சி வெளி வருகின்றது.

கேரள நடனத்தின் ஹஸ்த லக்ஷணங்கள் இம் மணியில் முடி வடைகின்றன. அடுத்த மணியில் ஹஸ்தப் பிரயோகங்கள் (முத்திரைகள்) விளக்கங்களுடனும், கோபிநாத் அவர்களின் புகைப் படங்களுடனும் சிறந்த முறையில் வெளிவரும்.

நாட்டுப் பாடல் இனத்தைச் சேர்ந்ததும் திருடனைக் கதா நாயகனைக் கொண்டதும் ஏட்டுச் சுவடி வடிவில் உள்ளதுமான ஒரு நொண்டி நாடகத்தை எளிய நடையில் பெ. தூரன் எடுத்துக் காட்டுகிறார்.

கனவு, கர்வபங்கம் என்ற இரு சிறு கதைகளின் மூலம் மக்கள் கலையில் சிறந்த அறிவைப் பெற்றிருப்பினும் செருக் கடைதல் கூடாது என்பதை கு. பரமானந்தமும், "கன்னி"யும் நினைவூட்டு கின்றனர்.

கலைத்துணுக்குகளும், 'உங்களுக்குத் தெரியுமா?'வும் இம்மணியிலும் தொடர்ந்து வருவதைக் காணலாம்.

குறிப்பு;—

நாட்டியத்தின் 6வது மணியிலிருந்து எஸ். எஸ். எல். ஸி. இண்டர், B. Mus, டிப்ளமோ. சிரோமணி முதலிய வகுப்புகளுக் குரிய ஸங்கீதப் பரீக்ஷைகளுக்குப் பயன் படும் வினாக்களும் விடைகளும் தொடர்ந்து விரிவாக வெளி வரும்.



உபயகுசலோபரி

நாட்டியத்தின் வாசகர்களாம் தங்களுக்கு எமது புத்தாண்டு வணக்கமும் வாழ்த்தும் உரித்தாகுக.

சித்திரைத் திங்களுடன் பிறந்த விரோதி எனும் புத்தாண்டு தமிழர்களின் உள்ளத்தை எங்ஙனம் கொள்ளை கொண்டு ஊக்கத்துடன் உணர்வளித்ததோ, அங்ஙனமே நாட்டியமும் தனது தொண்டை வாசகர்களின் வரையற்ற ஆதரவாலும், எழுத்தாளர்களின் எண்ணற்ற விஷயதானத்தாலும், சந்தாதாரர்களின் சலியாத உதவியாலும், வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வளம் பெற்று, பிரதி தமிழ்த் திங்கள் முதல் வாரத்திலே தங்கள் கரங்களில் தவழும் என்பதை உறுதியுடன் கூறுகிறோம். அதற்கான அமோக ஆதரவையும், ஒத்துழைப்பையும் தளராது தந்து, மேன்மேலும் ஓங்குவிக்குமாறு கோருகிறோம்.

கலையழகு இழந்து கருத்து வாடும் இளந் தமிழர்களுக்கு நாட்டியம் புது மெருகெனும் புத்துணர்ச்சியைப் புகுத்தி மங்கி மறைந்த மகிழ்ச்சியை மீண்டும் தட்டி யெழுப்பித் தொண்டு புரியும் என்ற திட நம்பிக்கையோடு உள்ளோம். நாட்டியம் நிலை பெற்று நீடூழி வாழ நாட்டிய மன்னன் நடராஜ மூர்த்தி அருள் புரிவானாக.

மேலும் "நாட்டியத்தின்" 6-வது மணியிலிருந்து எஸ். எஸ். எல். ஸி., இண்டர், B. Mus. டிப்ளமோ, சிரோமணி முதலிய வகுப்புகளுக்குரிய ஸங்கீத பரீக்ஷைகளுக்குப் பயன்படும் விரிவான வினா விடைகளும், (இசை நாட்டியக் கலைச் சொற்களுக்குப் பொருள் கூறும்) ஸங்கீத அகராதியும், தொடர்ந்து வெளிவரும் நற்செய்தியை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

மேலும் கலையைப்பற்றிச் சிறந்த கதைகளும் கட்டுரைகளுமடங்கிய எமது "நாட்டியத்தை" மிகுந்த பொருட் செலவுடன் வெளியிட வேண்டியிருப்பதால் வரும் ஜூன்மீ முதல் 'நாட்டிய'த்தின் தனிப்பிரதியின் விலை அணா 8 ஆகவும், வருடச் சந்தா ரூ. 6 ஆகவும் ஆக்கப்பட்டுள்ளதை அன்பர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

ரஞ்சன்

அபிநய தர்ப்பணம்

நந்திகேச்வரர்

● **மேற்கோள் : நாட்டிய சாஸ்திரம்:**—இவ்வாறு நாங்கள் தேவாஸுரயுத்தத்தை அபிநயம் பிடித்துக் காட்டியபொழுது, அங்கே கூடியிருந்த அஸுரர்கள், அஸுரநாசத்தைக் கண்ணுற்று நடுக்கமும் கலக்கமு மடைந்து விக்னங்களை உண்டாக்கி, எங்கள் நிருத்தியத்தைத்தடை செய்தனர். இதை அறிந்த தேவேந்திரன், காரணத்தை ஆராய்ந்து, மிகவும் கோபமடைந்து, தனது திவ்யத் துவஜத்தைக் கையிலேந்தி அரங்க பீடத்தை அடைந்த விக்னங்களையும், அவற்றிற்குக் காரணமான அசுரர்களையும்அழித்தான். பிறகு தேவர்கள் மிக மகிழ்ந்து, இந்திரனுடைய திறமையையும் அவனுடைய திவ்யாயுதத்தின் பெருமையையும் பற்றிப் பலவாறு புகழ்ந்து பேசினர்.

பிறகு மீண்டும் இந்திரவிழா ஆரம்பமாயிற்று. அப்பொழுது எஞ்சியிருந்த விக்னங்கள் அச்சத்தை விளைவித்து முன்போலவே நிருத்தியத்தைத் தடை செய்தன. அசுரர்களுடைய இத்தகைய கொடிய முயற்சியை யறிந்த யான் என் புதல்வர்களுடன் அயனை அணுகி, "ஐயனே! விக்னங்கள் இந் நாட்டியத்தை அழித்தே தீர வேண்டுமென உறுதி கொண்டுள்ளன. ஆதலால் தாங்கள் சரியான ரக்ஷாவிதி (காப்பு முறை)க்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறினேன்.

பிறகு அயன் விச்வகர்மாவை அழைத்து எல்லா லக்ஷணங்களும் பொருந்திய நாட்டிய சாலை யொன்றை மிகுந்த முயற்சியுடன் அமைக்கும்படி ஏவினார். அவனும் சில நாட்களிலேயே லக்ஷணங்களனைத்தும் பொருந்தியதும், மங்களகரமானதும், ஒப்பற்றதுமான நாட்டிய மண்டபமொன்றை அமைத்து, அதனைக் காண அயனை அழைத்தான்.

பிறகு, அயன் இந்திரன் முதலிய தேவர்களுடன் நாட்டிய மண்டபத்தைக் காண விழைந்து விரைந்துசென்றார். அனைவரும் நாட்டிய மண்டபத்தை மிக வியப்புடன் நோக்கி அகமகிழ்ந்தனர். அப்பொழுது பிரம்ம தேவன், அழகிய அந்நாட்டியமண்டபத்தின் பல பாகங்களையும், அசுரர்களின் இடையூறின்றிக் காக்கும் தொழிலில், பல தேவர்களை ஏவினார். அப்பொழுது தேவர்கள் சமாதான முறையிலேயே சொல்வன்மையால் விக்னங்களை அடக்க வேண்டுமென்று பிரம்ம தேவனிடம் தாழ்மையுடன் கூறவே, அவர் விக்னங்களை அழைத்து "நீங்கள் நாட்டியத்தை அறவே அழிப்பதற்கு முயல்வதேன்"? என வினவினார். அப்பொழுது விக்னங்கள் அயனிடம் "தேவர்களது விருப்பப்படி, தாங்கள் உண்டாக்கிய நாட்டியவேதம் தேவர்களது சுபத்தையும் அசுரர்களது அசுபத்தையும் அறிவிப்பதனால், அது எங்களுக்குப் பொருத்தமானதல்ல. மேலும் தேவர்கள், அசுரர்கள் முதலிய யாவரையும் தாங்களே

படைத்திருப்பதால், தங்களுக்கு அனை வரும் சமமே. அவ்வாறிருக்க, ஏனோ தாங்கள் அசுரர்களுடைய அசுபத்தைத் தெரிவிக்கும் நாட்டியவேதத்தை உண்டாக்க வேண்டும்'' என்று கூறவே பிரும்ம தேவன். "ஏ, அசுரர்களே! இந்நாட்டிய வேதம் உங்களையும் தேவர்களையும் பற்றியது மட்டுமல்ல; மூவுலகத்தினரின் பல வகை சுபாவங்களையும் இது அறிவிக்கும். ஆதலால் உங்களுக்குத் தேவர்களிடம் கோபம் வேண்டாம்'' என்றார்.

நாட்டியத்தின் பெருமை

ரிக்யஜுர் : ஸாம வேதேப்ய :
3 3 4
வே தாச்சா தர்வண : க்ரமாத் ‖ 7 ‖
3 11 2 1 1
பாட்யம் சாபிநயம் கீதம்
2 4 3
ரஸான் ஸம்க்ருஹ்ய பத்மஜ :
வ்யரீரசத் சாஸ்த்ர மிதம்
தர்ம காமார்த்த மோக்ஷதம் ‖ 8 ‖
4 3
கீர்த்தி ப்ராகல்ப்ய ஸௌபாக்ய
3
வைதக்த்யானும் ப்ரவர்த்தனம்
3 4 4
ஔ தார்ய ஸ்தைர்ய தைர்யாணும்
2 4
விலாஸஸ்ய ச காரணம் ‖ 9 ‖
து : கார்த்தி சோக நிர்வேத
2 3
கேத விச்சேத காரணம்
2 3
அபி ப்ரஹ்ம பராநந்தாத்
3
இதம் அப்யதிகம் மதம் ‖ 10 ‖
3 4
ஜஹார நார தா தீனும்
3 3
சித்தாநி கதம் அந்யதா
2 2

●●● (பொருள்) : பிரும்ம தேவன் ரிக், யஜுஸ், ஸாம, அதர்வ வேதங்களிலிருந்து முறையே வாசிகாபிநயம் (வசனம்), அபிநயம், இசை (கீதம்), ரஸங்கள், இவற்றை எடுத்து (சேர்த்து) இந்த சாஸ்திரத்தை இயற்றினர். இஃது அறம், பொருள், இன்பம், வீடு இவற்றை அளிக்கக் கூடியது.

(இஃது) புகழ், திறமை, பாக்யம், சாதுர்யம் இவற்றை அதிகரிக்கச் செய்வது. உதாரகுணம், விடாமுயற்சி, தைரியம், இன்பம் இவற்றிற்குக் காரணமானது.

(இஃது) துக்கம், வேதனை, சோகம் மனத்திடனழிவு (சோர்வு), தளர்ச்சி, முதலியவற்றின் அழிவுக்குக் காரணமானது. சிறந்த பிரமானந்தத்தினும் இக்கலை மிகச் சிறந்ததெனக் கருதப்பட்டுள்ளது,

அவ்வாறில்லாவிடில் (இக்கலை), நாரதர் முதலிய முனிவர்களுடைய உள்ளத்தை எங்ஙனம் கவர்ந்திருக்கக் கூடும் !

●மேற்கோள் : நாட்டிய சாஸ்திரம்:-

இந்நூலில், பிரும்ம தேவன் அசுரர்களிடம் கூறிய **நாட்டிய சாஸ்திரத்தின்** பெருமையைப் பற்றி பரதர் முனிவர்களுக்குப் பின்வருமாறு கூறுகின்றார்:—

"இந்நாட்டிய சாஸ்திரத்தில் தர்மம், லீலை, சாந்தி, ஹாஸ்யம், யுத்தம், காமம், வதம் முதலியவற்றைப் பற்றிய விஷயங்கள் பலவற்றைக் காணலாம். ஆகையால், இது எல்லோருக்கும் இன்பத்தை அளிக்க வல்லது. உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுவையில் விருப்பமிருக்கலாம். அதற்கேற்ப இதில் எல்லா வகையான சுவைகளும் கலந்திருப்பதால் வெவ்வேறு சுவைகளில் விருப்பமுள்ள ஸாமாஜிகர்கள் (சபையோர்கள்) அனைவரையும் இது மகிழ்வித்து அவர்களுக்கு இன்பத்தையும் பயக்கும்.

மேலும் இது சூரர்களுக்கு உற்சாகத்தையும், பேடிகளுக்குத் தைரியத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும், தேவர்களுக்கு விலாஸத்தையும், துன்புற்றவர்களுக்கு மனோதிடத்தையும், செல்வத்தை விரும்புவோருக்குச் செல்வத்தையும், அளிக்கும்.

துக்கம், சோகம் முதலியவற்றால் துன்புறுவோருக்கு ஆறுதலை அளிக்க வல்லதாக இந்நாட்டிய சாஸ்திரத்தை யான் அமைத்துள்ளேன். இது புகழ், ஆயுள், நன்மை, அறிவு-இவற்றைப் பெருக்கும்.

இந்நாட்டியத்தில் இல்லாத சாஸ்திரமோ, சிற்பமோ, வித்தையோ, கலையோ, யோகமோ, கர்மாவோ தனியே கிடையாது. இதில் அனைத்தும் அடங்கியுள்ளன. ஆகையினாலேயே, இதனை யான் உண்டாக்கினேன்.

மேலும் இது தேவர்கள், அசுரர்கள், அரசர்கள், குடும்பஸ்தர்கள், பிரம்ம ரிஷிகள் முதலியோருடைய வரலாறு, செயல்கள் முதலியவற்றை எடுத்துக் காட்டக் கூடியது.

மேலும் இன்ப துன்பங்களுடன் கூடிய உலகினரின் பலவகை சுபாவங்களை அபிநயத்தின் மூலம் வெளியிடுவதே நாட்டியமாகும்.

இதில் வேதம், இதிஹாஸம் முதலியவற்றில் காணப்படும்விஷயங்களனைத்தும் அடங்கியிருப்பதால், இந்நாட்டியம் உலகினருக்குத் சிறந்த இன்பத்தை அளிக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.'' என்றவாறு.

நடன வகைகள்

ஏதத் சதுர் விதோ பேதம்
4 11
நடனம் த்ரிவிதம் ஸ்ம்ருதம்
4
நாட்யம் ந்ருத்யம் ந்ருத்தமிதி
முனிபி : பரதாதிபி : ‖ 11 ‖
4 4 34

●●● (பொருள்) : (மேற் கூறப்பட்ட வசனம், அபிநயம், கீதம், ரஸம் என்ற) நான்குடன் கூடிய இந் நடனம் பரதர் முதலிய முனிவர்களால் நாட்டியம், நிருத்தியம், நிருத்தம் என மூவகைத்து என்று கருதப் பட்டுள்ளது.

தொடர்ச்சி:

நாட்டிய சாஸ்திரம்

வாசுதேவ சாஸ்திரி

(ஆராய்ச்சியாளர், சரஸ்வதி மஹால், தஞ்சை.)

நாட்டியம் - அபிநயம்

பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் அபிநயத்தின் பிரயோகத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:- முதலாவது நாடக அபிநயம். இரண்டாவது கீத அபிநயம். மூன்ருவது நர்த்தன அபிநயம்.

நாடக அபிநயமாவது நாடகத்தில் வரும் நாடக பாத்திரங்கள் நடிக்கும்போது செய்யும் அபிநயமாகும். கீத அபிநயம் என்பது பாட்டிற்குச் சரியாக அதன்பொருளை அபிநயித்தல். நர்த்தன அபிநயம் என்பது யாதொரு அபிப்பிராயத்தையும் வெளிப் படுத்தும் உத்தேசமில்லாமல் தாளத்துக்குச் சரியாக நர்த்தனம் செய்யும்போது கை முதலிய அங்கங்களை அழகு பெற அமைத்து அசைத்தலாகும். இவ்வித நர்த்தன அபிநயத்துக்காக வேண்டிய அழகான அமைப்புகளையும் அசைவுகளையும் பல சிறிய கோவைகளாகத் தொகுத்திருக்கிருர்கள். அவைகளுக்கு நர்த்தன கரணங்கள் என்று பெயர். ஒவ்வொரு கரணமும் ஒருவித அபிப்பிராயத்தை உட்கருத்தாகக் கொண்டதெனினும் அக் கருத்தை வெளியிடுவதற்காகவென்று அதை நர்த்தனத்தில் உபயோகப் படுத்துவதில்லை. அழகு ஒன்றையே கருதி இக் கரணங்கள் நர்த்தனத்தில் உபயோகப் படுத்தப் படுகின்றன.

நாடக அபிநயம் இருவகை:- நாடகத்தில் நடிக்கும்போது செய்யும் அபிநயம் இரண்டு வகையாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. முதல் வகை, நாடக பாத்திரங்கள் உலகத்தில் பேசிப் பழகுவது போலவே, பேச்சு, பாவனை முதலியவைகளை அழகு செய்வதற்கான கலைப் பண்பாடுகளைச் சேர்க்காமல் நடித்தலாகும், இதற்கு 'லோக தர்மீ' என்று பெயர், 'உலக இயற்கையை ஒட்டியது' என்பது இதன் பொருள், மற்ருெரு வகை, உலக இயற்கையிலுள்ள நடை, பேச்சு, பாவனை முதலியவைகளோடு, அழகு செய்வதற்காகவென்றே, பேச்சில் சாந்தம், நடையில் தாளப் பிரமாணம், சைகைகளில் அழகு பெற அமைத்துக் காட்டல், பாவனைகளில் ஓர் அதிசயம், முதலியவைகளும். நாடக அரங்கில் உலகத்திலுள்ள தேசங்களையும், திசைகளையும், காட்டுவதற்காகவும், உட்புறம், வெளிப்புறம், ரகசியப் பேச்சு, தனக்குத்தானே பெசிக் கொள்ளுதல் முதலியவற்றிற்காகவும் ஏற்படுத்தப்பட்ட சில கட்டுப்பாடான சம்பிரதாயங்களும் சேர்ந்ததாகும். இதற்கு 'நாட்டிய தர்மீ' என்று பெயர். 'நடிகர்களின் கட்டுப்பாடான சம்பிரதாயங்கள் சேர்ந்தது' என்பது இதன் பொருள். இவற்றின் விவரம் அத். 14-சுலோ. 69-81ல் அடங்கியிருக்கிறது.

தற்காலத்தில் நாடகங்களிலும், திரைப் படங்களிலும் 'லோக தர்மீ' என்ற இயற்கை முறை அதிகம் வழங்கப் படுகிறது. 'நாட்டிய தர்மீ' என்ற முறை வரவரக் குறைந்து வருகிறது. ஆனல் பரத முனிவர் நாடகங்களில் நாட்டிய தர்மீயையே விசேஷமாகப் பின்பற்ற வேண்டும் என்று வறபுறுத்தியிருக்கிருர். (அத் '4' சுலோ. 80,81). அதை அனுசரித்தே நம் நாட்டில் சுமார் 30,40 வருஷங்களுக்கு முந்திவரையில் நாடக நடிப்புகளில் உலக இயற்கைக்கு மாருன பல வகைக்கட்டுப்பாடுகள் சேர்ந்திருந்தன, உதாரணமாக; நாடக பாத்திரங்கள் அரங்கில் வந்தவுடன் அதைச் சபையோருக்குத் தெரியப் படுத்துவதற்கான, 'தரு' என்னும் ஒரு பாட்டுப் பாடப்பெற்று அதற்குச் சரியாக அந்த நாடகப் பாத்திரமே ஆடலையும் செய்வதுண்டு. இது உலக இயற்கைக்கு மாருனது என்பது சொல்லத் தேவையில்லை. பேசும்போதும் இயற்கையான கை ஜாடை முதலிய அங்கங்களின் அசைவுகளோடு நிறுத்திக் கொள்ளாமல், சொற்களின் பொருளை விளக்குவதற்காக, அதிகமான கைமுத்திரை

முதலியவைகளை உபயோகப்படுத்தியும் வந்தார்கள். இது நாட்டிய தர்மியின் பரம்பரையைச் சேர்ந்தது. இது வரவரக் குறைந்து இப்போது அற்றுப்போய் விட்டதென்றே சொல்ல வேண்டும், ஆனல் காலப் போக்கில், 'நாட்டிய தர்மீ' என்ற மார்க்கம் மறுபடியும் புத்துயிர் பெற்றாலும் பெறலாம்.

நாடக அபிநயத்தின் நான்கு பாகங்கள்:-நாடகத்தில் ஒரு கதையையோ, நிகழ்ச்சியையோ, சித்திரித்து நடித்துக் காட்டுவதற்கான எல்லா உபாயங்களையும் அபிநயம் என்ற சொல்லில் அடக்கலாம். அபிநயம் என்ற சொல்லைப் பகுத்துப் பொருள் கூறுமிடத்து, அபி—எதிராக, நயம் பொருளைக் கொண்டுவந்து சேர்த்தல் என்று பிரித்திருக்கிறார் பரத முனிவர். (அத். 8. சு. 6.7) இவற்றை நான்கு பாகங்களாகப் பிரித்திருக்கிறார். முதலாவது நடிகர்களின் அங்க சேஷ்டைகள்; இதற்கு ஆங்கிக அபிநயம் என்று பெயர். இரண்டாவது நடிகர்களின் பேச்சு, பாட்டு முதலியன; இதற்கு 'வாசிக அபிநயம்' என்று பெயர். மூன்றாவது நாடக பாத்திரங்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வியர்த்தல், கண்ணீர் விடுதல், மயிர் சிலிர்த்நல், மயக்கம் கொள்ளல், முதலிய உடம்பின் மாறுபாடுகளால் வெளியிடல்; இதற்கு 'ஸாத்விக அபிநயம்' என்று பெயர்—'ஸத்வம்' என்றால் மனது என்று பொருள். நான்காவது நடிகர்களின் உடை ஆபரணம், முக வர்ணம் முதலியவைகளும் (Make - up), நாடகத்தில் பட்டணங்கள், ஆறுகள், மலைகள், முதலியவைகளைக் காட்டுவதற்காக அமைக்கப்படும் ஸீன்களும் மற்ற உபகரணங்களும் ஆகும். இதற்கு 'ஆஹார்ய அபிநயம்' என்று பெயர், 'ஆ ஹார்யம்' என்றால் எடுத்துக் காட்டக்கூடியது' என்று பொருள்.

இந் நான்கு வகை அபிநயங்களையும் பற்றி நாட்டிய சாஸ்திரத்தில் விரிவான குறிப்புகள் அடங்கியிருக்கின்றன. அங்க அபிநயத்தைப்பற்றி 8, 9, 10, 11, 12, 13, 24, 26 ஆக 8 அத்யாயங்கள் பேசுகின்றன. இவற்றில் சுமார் 1360 சுலோகங்கள் அடங்கியிருக்கின்றன. 'வாக்கு அபிநயம்' 18, 19 என்ற இரண்டு அத்தியாயங்களிலும், 'ஸாத்விக அபிநயம்' 7 வது அத்தியாயத்தின் இறுதியிலும், 'ஆ ஹார்ய அபிநயம்' மிகவும் விரிவாக 23-வது அத்தியாயத்திலும் சொல்லப் பட்டிருக்கின்றன. இவற்றின் விரிவான விளக்கத்தை அடுத்த கட்டுரையில் எடுத்துக் கொள்வோம்.

(தொடரும்)

சந்தோஷ அறிவிப்பு

நாட்டியத்தின்

சந்தாதாரர்களுக்கு ஒரு சிறந்த பரிசு.

இனிமேல் கலைஞர்கள் "நாட்டியம் எங்கே, எங்கே?" என்று கடையைத் தேடிச் செல்ல வேண்டாம். நிறைந்த கலை விஷயங்களுடன் உன்னதமாய்த் தயாரிக்கப்பட்டு வெளி வரும் நாட்டியத்தின் சந்தாதாரர்களாக உடனே எல்லோரும் சேர்ந்து கொள்ளுங்கள்.

வருஷச் சந்தா ரூபாய் **6**-தான். சந்தாத் தொகையை உடனே அனுப்பிக் கொடுத்து, சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு ஒரு சிறந்த பரிசு கொடுப்பதாகத் தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறது.

சிறந்ததொரு நாடகப் புத்தகம் தயாராகியுள்ளது. நாட்டியத்தின் ஆசிரியர் ரஞ்சன் அவர்கள் நவரஸங்களையும் ஊட்டவல்லதாய் இயற்றியுள்ள **'மாப்பிள்ளை வேட்டை'** யென்னும் நாடகப் புத்தகம் ஒவ்வொரு சந்தாதார்களுக்கும் இலவசமாக அளிக்கப்படும்.

உயர்ந்த காகிதத்தில் அச்சிடப் பெற்று, வர்ணச் சித்திரம் கொண்ட ஆர்ட் ராப்பருடன் தயாராயுள்ள புத்தகம் சுமார் **120** பக்கங்களை உடையது. அதன் விலை ரூபாய் **2.**

ஆறு ரூபாய்களுக்குப் பன்னிரண்டு மாதம் உங்கள் இல்லந் தேடி வரும் நாட்டியத்துடன், முன் கூட்டியே மலரொத்த வனப்புடைய, மணம் நிறைந்த நாடகப் புத்தகமும் அனுப்ப ஏற்பாடு செய்திருப்பது சந்தாதாரர்களுக்கு அதிர்ஷ்டமேயல்லவா? உடனே சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளுங்கள் !

கிடைக்குமிடம் :—

"நாட்டியம்"

49, கதீட்ரல் போஸ்டு,

மதருஸ் - 6.

இலக்கியச் சிறு கதை 2

கனவு

கு. பரமானந்தம்

"என்ன வேடிக்கை!"

"வேடிக்கை யல்ல வேந்தனே! அறிவும், ஆற்றலும் அமைந்திருந்தால் மட்டிலும் போதுமா? நாளைக்கு இது யார் குற்றம்என்பார்கள்?"

"குற்றம் என்னுடையது..........

"அல்ல, அப்படிக்கூறவில்லை நாம். தங்களுடைய பெருந்தன்மையை துர் விநியோகஞ் செய்ய அநுமதிக்கலாகாதல்லவா? இசையில் வல்லவன்தான். இல்லையென்று கூறுவது இழுக்காகும். ஆனால் தங்க ஊசி யென்பதற்காக தன் கண்களைக் குத்திக்கொள்வது தகுமா?

இப்பொழுது அவன் தற் பெருமையைக் கண்டு "என்ன......"செய்ய முடியும் என்று தானே எழுப்புகிறீர் ஓர் ஐயப்பாட்டை. 'குடிகள் தற்பெருமையடித்துக் கொண்டால் மகிதலமாளும் மன்னன் பெருமை மங்குவதற்கு வேறு உபாயமே தேவையில்லை. ஆலவாய்ப் பெருமானின் அருளை நினைந்து ஆவன செய்ய வேண்டும். புலவரே, பாணபத்திரனைப்பற்றி உம்முடைய பரந்த கருத்தென்ன?

'சிறந்த பாடகன்: சிங்காரத்தின் சிற்பி.

'அன்று அவையில் ஏமநாதன் பாடும் பொழுது பத்திரன் முகத்தைப் பார்த்தீரல்லவா? 'ஆம். அது பொறுமையின் பொறி-யென்றோ பயத்தின் பளிங்கென்றோ...................நானும் எண்ணவில்லை நாவலரே. ஆனால்......'ஆனால் என்ன? ஆத்தானப் பாணனாகவே அவனிக்குப் பிறந்தவனாயிற்றே அவன்,......

'அப்படி யிருக்கும் பொழுது நேற்று ஏன் அப்படிப் பேச்சிலே உயிரற்று இருந்தது? உணர்வும் உறங்கியிருந்தது. பாராளும் பாண்டியனே!' ஆலவாய்ப் பெருமானிடம் கொண்ட அன்பு என் தொண்டை முடித்துக் கொடுக்கட்டும் என்று தானே கூறினான்.

'வென்று விடுவேன்' என்று விளம்பியிருந்தால் வெதும்பற்ற ஏம நாதனுக்கும் வெந்த சிந்தையினனான இவனுக்கும் வேற்றுமை இருந்திருக்க முடியாது.

'கவிஞரோ காலம் அதிகமாகிவிட்டது, காலையில் விரைவாக மண்டபம் வந்துவிடுங்கள்.

'வேந்தனே வெற்றி யுண்டாகட்டும் வருகிறேன்.......

பாண்டியனிடம் இவ்வாறு விடை பெற்றுக் கொண்டு தன் வீடு சென்றார் புலவர். முதற் கோழியும் கூவியது. முண்டகமும் மலர்ந்தது'

"வணங்குகிறேன்...—திடுக்கிட்டுத் திரும்பினான் பாண்டியன். தான் காண்பது கனவுதானோ என்று அவன் நினைத்ததை முகம் தெளிவாகக் காட்டியது. நினைக்காமல் என்ன செய்வது! இப்படி அதிகாலையில் அருணனுதயத்திற்குள்ளாக பாணன் வரவேண்டிய அவசியம்! அரை நொடியில் அவன் மனம் அந்தகாரத்தில் அமுங்கியது. 'ஆம் தன் பலக்குறைவை உணர்ந்து பகலவ னெழுச்சிக்குள் விடை பெற்றுக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறான். இருளில் மன்னன் மனம் தடுமாறியது,

'மன்னவ!' பாணபத்திரன் பேச்சிலே தழதழப்பு தொனித்தது.

"மன்னனுடைய மானமும் மறைஞனை உன் மானமும் ஒரே தெப்பத்தில் நிலவுவது உனக்குத் தெரியாதா?" மனத்திலேயே மன்னன் கூறிக் கொண்டான்.

'ஆலவாய்ப் பெருமான் அருள்......'

'இருந்தால் ஏன் இப்படி நேருகிறது!'

'இருந்தாலா! ஐயோ! அவன் பெருமையை என் சிறுமையோடு சேர்த்துவிட்டீர்களே?'

'என்ன?'

'பாண்டியனுக்கு ஒளி தென்பட்டது.

'பிறரைத் தூக்கத்தான் தாழுந்தயாளுவை... மனக்கண்களை யாரோ துடைப்பது தெரிந்தது. முகத்திலே உறங்கிய முழு ஒளி விழித்தது 'பாண பத்திரா! பாண்டியனுக்குப் பகுத்தறிவுப் பாதைக்கு வழிகாட்ட்.........

'படியில் ஒருவரும் தேவையில்லை. கடம்ப வனத்திலே கண்டுவரும் கலைப் பெருமானுக் கல்லவா அக்கவலை? விழி கொடுத்தவன் வழி மறைப்பானா?

'பாண பத்ரரே' புகன்றது புரியவில்லை.

'காவலனே நேற்று இரவு கனவு கண்டேன்'

'என்ன?'

'நம் அன்பன் ஆலவாயுடையான் அரன் அடியவர்க்கு அடியவன்-நல்லது செய்யும் நடராச மூர்த்தி 'பதராதே பத்ரா'... பரமன் என்ன செய்தான்? 'ஐயனே அவன் என்னைவிட எளியவனாகி ஏம நாதன் வீடுசென்றான். என்ன பிழை செய்து விட்டேன்....!என்னபிழை......

'தன்னலங் கருதி, அந்த தயாநிதியின் தலையில் விறகையல்லவா சுமத்திவிட்டேன், பாவம். விலா எலும்பை விரல்விட்டு எண்ணுமளவு தெரிய வெயிலில் வீதிதோறும் வியர்க்க சுமந்துசென்று ஏமநாதன் வாயிலில் இறக்கினார். அந்தோ பரிதாபம் தலை அப்படியே வழுக்

கையாகத் தெரிந்தது, என்னுள்ளம்போல ஏதும் பசையற்றிருந்தது.''

'பாண்டியன் சற்று நிமிர்ந்து நின்றுகொண்டான்.

பாணன் ஒருமுறை பெருமூச்சு விட்டு மேலே தொடர்ந்தான்.

'குடுக்கை விரிந்த தன் யாழை எடுத்து இசையெழுப்பி சாதாரிப் பண்ணை, சவுந்தரியமாகக் கூட்டினான். ஆஹா! என்ன குழைவு, என்ன கமகம், என்ன நயம்!

'பாண பத்திரரே! என்ன உமக்கு.......... பைத்தியமில்லை. கனவிலும் இப்படியேதான், பரவசமாகி விட்டேன். பரமானந்தம் கொண்டேன். இறைவனுடைய இசை வெள்ளம் ஏமநாதனை உருட்டி வெளியே கொணர்ந்தது. மமதையைப் பிடித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றான். பாவம் இசையிலே உருகிவிட்ட, அது கைகொடுக்க வில்லை. அதன் நிழலைப் பிடித்துக்கொண்டுப் பேசினான்,

"யாரப்பா நீ"

'யசமான்' வெறவுக் காரனுங்க' வெற்றிலைக் காவியேறிய வெதும்பு பற்களிலே முல்லைகள் அரும்பின முதுமை முன்னுக்கு வந்தது.

"நன்றாகப் பாடுகிறாயே!" எங்கே இதைப் பழகினாய். இதுவரை நான் கேட்டதேயில்லை.

என்ன பாட்டுங்க யசமான், அடிமையைத் தான் தள்ளிப் புட்டாரே ஆயிடுச்சான் வயசு. பத்திரராசாவூட்டுலே எருமைகளைச் சாக் கூட இன்னிக்கெல்லாம் கேட்கலாமே,



பாண பத்திரனடிமையா! கடுகு சிறுத்தாலும் காரம்... கடைசியாக இப்படி கூறிவிட்டு ஏமநாதன் உள்ளே சென்று விட்டான். பெருமான் பின் தந்த கருணையிலே பிறந்த காட்சியில் கண்டு கொண்டேன். கொடைமிகும் கொற்றவ! ஏமநாதன் ஓடிப்போய் விட்டான். பாணா எழுந்திரு பாண்டியனிடம் போய் பகன்றதைக் கூறிவா! என்று அவர் அனுப்ப விரைந்தோடி வந்தேன்.

"பாண பத்திரரே! கற்பகவல்லி சமேதனின் கருணை இக்கனவை நனவாக் கட்டும்.

"இன்னும் ஆக்குவதற்கு என்ன இருக்கிறது..."

"யாரது? புவனம் புகழும் புலவரே. வந்து விட்டிர்களா? உங்கள் வார்த்தை உண்மையாகட்டும் புகழுடைய புரவலனே! என்வார்த்தையும் பாணன் கனவும் பரமன் அருளால் மெய்யாகி விட்டன.

அதிகாலையில் ஏமநாதன் வீடு சென்று வந்த ஏவலாளர் கூறியதைத் தான் இங்கு வந்தும் இது வரை கேட்டுக் கொண்டிருந்தேன். ஆலவாய்ப் பெருமானின் அருளடி வணங்கி வருவோம் வாருங்கள். ●

காலக்ஷேப மோகம்

[கோட்டு வாத்யம் துரையப்ப பாகவதர்]

காலக்ஷேபக் கலையில் ஒரு புரட்சியையுண்டாக்கி, நூதன மார்க்கத்தை சிருஷ்டித்த **தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர்**களுக்குப் பிற்காலத்தில் பிரஸித்தர்களாய் விளங்கிய சில பாகவதர்களைப் பற்றி சுருக்கமாய் எழுதுவதற்கு முன் காலக்ஷேபத்துறையில் ஏற்பட்ட சில ரசமான நெருக்கடிகளைப் பற்றி இங்கு எழுதுவது அவசியமாகிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சங்கீதத் துறையில் கூட்டம் குறைய ஆரம்பித்தது. பரத நாட்டியக் கச்சேரிகளில் பொது ஜனங்களுக்கிருந்த ஆர்வம் படிப்படியாய்க் குறைந்தது. சங்கீதக் கச்சேரி செய்யத், தகுந்த யோக்யதை தங்களுக்குப் போதா தென்ற காரணத்தினாலோ அல்லது கதா கால க்ஷேபங்களின் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் என்ற நம்பிக்கையினாலோ, சில சங்கீத வித்வான்கள் **காலக்ஷேபம்** செய்ய முன் வந்தனர். சென்னையில் முதன் முதலில் ஏற்பட்ட "**பக்தி மார்க்கப்ரஸங்க சபா**" ஆரம்ப காலத்திலிருந்து அதாவது 1895ம் வருஷம் முதல் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் அவர்களையும், அவருக்கு அவகாசமில்லாத காலங்களில் வேறு சில பாகவதர்களையும் அமைத்ததே யன்றி, சங்கீத வித்வான்களை வெகுவாய் ஆதரிக்க வில்லை. மாதந்தோறும் கதைகளைத் தவருமல் ஏற்படுத்தியும் கோகுலாஷ்டமி, ராம நவமி போன்ற ஸீரீஸ்களில் சில கக்சேரிகளைச் சேர்த்துக் கொண்டதோடும் நின்று விட்டது. பிற்காலத்தில் ஏற்பட்ட "**சாரதா சங்கீத சபா**," "**திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபா**" போன்ற சபைகளிலும் கச்சேரிகளுக்கு அதிக இடம் கொடுக்கப் பட வில்லை. இதனுல், சங்கீதத் துறையில் ஈடுபட்டவர்களில் சிலருக்குக் கால க்ஷேபஞ் செய்யலாம் என்ற ஆசை ஏற்பட்டது இயற்கையே. இதுமட்டுமா? நல்ல சங்கீத யோக்யதையுடன் புராணம் சொல்லி வந்த அநேக பௌராணிகர்கள் நாமும் நின்று கொண்டு, இந்தக் கதையைக் கால க்ஷேபமாகச் செய்வோமே என்று ஆரம்பித்தார்கள். ஆங்கிலம் பயின்று சொல்வன்மையுடன் விளங்கிய சிலர், தங்களுக்கிருந்த உபாயமான சங்கித ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு தக்க பின் பாட்டுக்காரர்களை அமைத்துக் கொண்டு கதை செய்ய முன் வந்தனர்.

இதே போல் ஸம்ஸ்க்ருத பாஷையில் நல்ல பாண்டித்யமும் சொல் வன்மையுமுள்ள சில உபந்யாசகர்கள் நல்ல ஸெட்டை அமைத்துக் கொண்டு இதில் ஈடுபட்டனர். ஏற்கனவே கதைகளில் பின் பாட்டுப் பாடி நல்ல அநுபவம் பெற்ற சிலர் சங்கீதத்தில் அதிகப் பரிச்சயமில்லாத பாகவதர்களுக்குப் பாடுவதை விட நாமே கதை செய்வது நலம் என்று ஆரம்பித்து விட்டார்கள். இம்மாதிரியே பாகவத பரம்பரையில் உதித்த சிலரும், நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்ற சிலரும், நட்டுவாங்கம் செய்து வந்தவர்களில் சிலரும், சில பள்ளிக் கூட உபாத்தியாயர்களுங் கூட, இதில் ஈடுபட்டார்கள் என்ருல் இந்தக் காலக்ஷேபத் துறையில் ஏற்பட்ட நெருக்கடியை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

இப்படி முன் வந்த ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குள்ள, தனிப்பட்ட ஏதோ ஒரு யோக்யதையின் மூலம் பெயரும் புகழுமடைந்து விடலாம் என்று தான் எண்ணினுர்கள்.

ஆரம்ப காலத்தில் சிலருக்கு அந்தந்த வகுப்பாரின் அபிமானத்தால் செலாவணி யிருந்த போதிலும், காலக் கிரமத்தில் மறைந்து விட்டது. உண்மையான ஜீவகளையும், யோக்ய தாம்சமும் இருந்த கதைகள் தான் கடைசி வரை நீடித்து நடந்தன.

ஒரு சமயம் நல்ல முக வெட்டும், பாடம் செய்ததைத் தவருமல் சொல்லக் கூடிய "வடு" வான ஒரு பையன் கதை செய்யக் கிளம்பினுன். அநேகர் ஆச்சரியம் தாங்காது கூத்தாடினர். ஆனுல் மாமரத்தில் உண்டாகும் சில வடுக்கள் பெரிதாகிப் பழுப்பதற்குப் பதிலாக வெம்பி விடுவது போல் அந்தப் பையனும் வெகு சீக்கிரத்தில் இருந்தஇடம் தெரியாமல் போய் விட்டான். இந்தப் பையனைப் பார்த்து, பிற்காலத்தில் அநேக பையன்கள் கிளம்பினர். அவர்களில் பலருக்கும் முன் சொன்ன பையன் கதிதான் கிடைத்தது.

மற்ருெரு சமயம் நல்ல முக வெட்டும், இனிமையான சாரீரமும், நல்ல சுருதி லய ஞானமும் சொல் வன்மையும் வாய்ந்த ஒரு பிராமணப் பெண்மணி மிகுந்த தைரியத்துடன் கதை செய்ய முன் வந்தார்.

அந்த அம்மையாரின் கால க்ஷேபங்கள் கிருஷ்ண பாகவதரவர்களின் பத்ததியில் அமைந்திருந்த படியால், காலக்ஷேபத் துறையில் ஒரு சூராவளிக் காற்றும், புரட்சியும் தோன்றின. அவருக்குப் பொது ஜனங்களின் ஆதரவும் அபிமானமும் பூர்ணமாயிருந்த படியால் கணக்கில்லாத கதைகளும், ஏராளமான வருமானமும் ஏற்பட்டன. லோக ஸ்வபாவப்படி அநேக பெண்கள் தாங்களும் கால க்ஷேபங்களின் மூலம் இதோப தேசம் செய்து ஏராளமான வருமானத்தை யடையலா மென்று முன் வந்தனர். அவர்

களில் சிலருக்கு வசீகரமான தோற்றமும், தேகக் கட்டும், இனிமையான சாரீரமும் இருந்தன; "சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைகளைப் போல்" அவர்கள் கதை செய்த படியால், சில காலந்தான் அவர்களுடைய கதைகளுக்கு ஆதரவு இருந்தது. "யௌவனம் நிலையாதது" போல் செலா வணியும் நிலைக்க வில்லை. பரத நாட்டியக் கலையில் ஈடுபடவேண்டியவர்கள் கால க்ஷேபங்களி லீடுபட்டதால், கலையும், கால க்ஷேபமும் ஒருங்கே குலைந்தன. இப்படியாக காலக்ஷேபக் கலையானது க்ஷீணிக்கும் விஷயத்தில் தொண்டு புரிந்த சிலரும் இருந்தார்கள். ஆகவே உண்மையான ஜீவகளையும் யோக்ய தார்ம்சமுமில்லாத கதைகள் எல்லாம் அவ்வப்போது தோன்றி சில காலத்தில் மறைந்தன!

விஷயம் எப்படி யிருந்த போதிலும் நல்ல சாரீரத்துடன் கதைகளில் நிர்வகித்துப் பாடும் அநுபவம் வாய்ந்த சிலருக்கும் சுநாதமாய் மிருதங்கம் வாசிக்கும் சிலருக்கும் இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்து எதிர் பாராத கிராக்கிகள் ஏற்பட்டன.

பரத நாட்டியங்களில் புகழுடன் வாசித்த சில மிருதங்கக் காரர்கள் ஒவ்வொருவராகக் கதைகளில் வாசித்துப் பெயரும், புகழுமடைந்தார்கள். ஆக்வே பாகவதர்களாக முன் வந்த அநேகருக்குத் தங்களுக்கென நிரந்தரமான ஜமாவை (ஸெட்டை)அமைத்துக் கொள்ள முடிய வில்லை. சில பின் பாட்டுக் காரர்கள் தங்களையே ஏலம் கூறிக்கொண்டு அதிகப் பணம் கொடுக்கும் பாகவ்தர்களை அவ்வப்போது அண்டினார்கள். சிலர் அங்குமிங்குமாய்த் திண்டாடினார்கள். வேறு சிலர் சங்கீதக் கச்சேரி செய்ய முன் வந்தார்கள். இதனால் காலக்ஷேபத் துறையில் உண்மையாய்ப் பாடுபடலாம் என்று நம்பி, கதை செய்ய ஆரம்பித்த சிலர், இம்மாதிரியான பின்பாட்டுக் காரர்களின் தொல்லையால் கதைகளைத் தொடர்ந்து நடத்த முடியாதவர்களானார்கள். ஆனால், அண்ணன் தம்பிகளாய் அமைந்து பரஸ்பர ஒத்தாசையுடன் கதை செய்ய முன் வந்தவர்களில் சிலர் மட்டும் இன்றைக்கும் இந்தக் காலக்ஷேபத் துறையின் ஞாபகச் சின்னங்களாய் ஆங்காங்கு விளங்குவது குறிப்பிடத்தக்கது. கலைகளைக் காப்பாற்றும் விஷயத்தில்கங்கணம் கட்டிக்கொண்டு உழைப்பபதாய்ச் சொல்லிக் கொள்ளும் "சென்னை சங்கீத வித்வத் சபையார்" கால க்ஷேபக் கலைக்குப் போதிய ஆதரவளிக்க வில்லை என்பதை இங்கு வருத்தத் துடன் குறிப்பிட வேண்டியது நமது கடமையாயிருக்கிறது. இதைப் போலவே மற்ற ஊர்களில் உள்ள சங்கீத சபை பலவற்றிற்கும் கால க்ஷேபங்களைப் பற்றிய சிந்தனையே யிருப்பதாகத் தெரிய வில்லை.

எல்லா சபைகளும் அதனதன் கால க்ஷேப விஷயங்களில் பெரிதும் கவலை கொண்டு வசூல் விஷயத்திலும், வரி செலுத்தும் விஷயத்திலும் தங்கள் கவனத்தைப் பறி கொடுத்திருக்கையில் காலக்ஷேபக் கலையைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்குக் காலமும் பொழுதும் ஏது? ●

உங்களுக்குத் தெரியுமா?

1. பிளேட் வெங்கட்டராமய்யர், என்ற பெயர் நாகை வித்வானுக்கு எப்படி ஏற்பட்டது?

2. மிருதங்கத்திற்குத் தமிழில் பெயர் என்ன?

3. தற்காலப் பிரபல வித்வான் மஹாராஜபுரம் விசுவநாதய்யரின் குரு பரம்பரை எது?

4. ஆதியில் உண்டான தாளங்கள் எவை? அவற்றை எப்படிப் போடுவது?

5. நாட்டியத்தில் முத்திரை, சாரி, கரணம், அங்கஹாரம் இவற்றை விளக்குக.

6. 'மஹாவைத்திய நாதய்யர்' என்ற பட்டம் அவருக்கு எப்போது வழங்கபபட்டது?

7. ராகம், சுருதி, ஸ்வரம், மூர்ச்சனை, இவை தமிழிசையில் எவ்வாறு வழங்கப்படுகின்றன?

8. இசைக்கலைக்குத் தொண்டு புரிந்த தஞ்சை மன்னர் எவர்? அவர் புரிந்த தொண்டையும் குறிப்பிடுக.

9. ஐரோப்பியர் ஸப்த ஸ்வரங்களை எவ்வாறு உச்சரிக்கின்றனர்?

(விடைகளை 198-ம் பக்கம் பார்க்கவும்)

அடவு ஜாதிகள்

பயிற்சி 8

ஆரம்பநிலே:

ஹஸ்தம் : த்ரிபதாகம்
பரதங்கள் : ஸம நிலே.
உடல் கைகள் : உள்ளங்கை ஒன்றை ஒன்று நோக்கியபடி மார்புக்கெதிராக இருக்க வேண்டும். உடல் ஸம நிலேயில் இருக்க வேண்டும்.
தலே கண்கள் : ஸமநிலே :

எண்ணிக்கை 1. (1-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம் : த்ரிபதாகம்
பாதம் : எண்ணிக்கையின் போது வலது காலேத் தூக்கி இடது பாதத்திற்கு ஓரடி வலது புறமாகத் தள்ளி மிதிக்க வேண்டும்.
உடல், கைகள் : வலது கையை மேலே தூக்கிக் கமானேப் போலக் கொணர்ந்து வலப் புறமாக நன்ருக நீட்ட வேண்டும். உள்ளங்கை, மேல் நோக்கி இருக்க வேண்டும். உடல் வலது புறம் லாகவமாக வளேந்து கொடுக்க வேண்டும்.
தலே, கண்கள் : வலக் கையைத் தொடர்ந்து செல்ல வேண்டும்.

எண்ணிக்கை 2. (2-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம் : த்ரிபதாகம்
பாதம் : எண்ணிக்கையின் போது இடக் காலேத் தூக்கி முன்னிருந்த இடத்திலேயே மிதிக்க வேண்டும்.
உடல், கைகள் : இடது கையை மேலே தூக்கிக் கமானேப் போலக் கொணர்ந்து இடது புறமாக நன்கு நீட்ட வேண்டும். உள்ளங்கை மேல் நோக்கிய படி இருக்க வேண்டும்; வலது கையை முன் போலவே கொணர்ந்து மார்புக்கு நேராக உள்ளங்கை கிழ் நோக்கியபடி வைக்க வேண்டும்.
தலே, கண்கள் : இடது கையைத் தொடர வேண்டும்.

எண்ணிக்கை 3. (3-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம்: த்ரிபாதகம்.

பாதம்: எண்ணிக்கையின் போது உயர எழும்பி இரு கால்களையும் முன் பாதங்கள் (விரல்கள்) கீழே ஊன்றும்படி வைத்துப் பாதி யளவு உட்கார வேண்டும்.

உடல் கைகள்: மாறுதல் இல்லை.

தலை, கண்கள்: ஸமநிலை.

எண்ணிக்கை 4. (4-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம்: த்ரிபதாகம்

பாதம்: எண்ணிக்கையின் போது வலது காலை மட்டிலும் மேல் தூக்கி மிதிக்கவும்.

உடல், கைகள்: மேல் நோக்கிய இடது கையின் உள்ளங்கை கீழ் நோக்க வேண்டும். கீழ் நோக்கியுள்ள வலது கையின் உள்ளங்கை மேல் நோக்க வேண்டும்.

தலை, கண்கள்: வலது கையைத் தொடர வேண்டும்.



1 2 3 4

எண்ணிக்கை 5.

1-வது எண்ணிக்கையை இடது பக்கத்திலிருந்து ஆரம்பித்துச் செய்யவும்.

எண்ணிக்கை 6.

2-வது எண்ணிக்கையை இடது புறத்திலிருந்து ஆரம்பித்துச் செய்யவும்.

எண்ணிக்கை 7.

3-வது எண்ணிக்கையை இடது புறத்திலிருந்து ஆரம்பித்து செய்யவும்.

எண்ணிக்கை 8.

4-வது எண்ணிக்கையை இடது புறத்திலிருந்து ஆரம்பித்துச் செய்யவும்.

எண்ணிக்கை 9. (5-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம்: த்ரிபதாகம்

பாதங்கள்: எண்ணிக்கையின் போது வலது காலைத் தூக்கி இடது காலுக்கு ஓரடி கோணமாக முன் புறம் தள்ளி மிதிக்கவும்.

உடல் கைகள்: வலது உள்ளங்கையை மேற்புறந் திருப்பியபடி கோணமாக (diagonal wise to the right upwards) முகத்திற்கு நேராக உயர்த்திப் பிடிக்க வேண்டும். கீழ் நோக்கிய இடது உள்ளங்கையை மேல்நோக்கியிருக்கும்படி வைக்க வேண்டும்.
உடல் லாகவமாக வலது புறம் குழைந்து வலது தோள் சற்றே முன்புறம் தள்ளப்பட்டிருக்க வேண்டும்.

தலை, கண்கள்: வலது கையைத் தொடர வேண்டும்.

எண்ணிக்கை 10. (6-வது பலத்தைக் காண்க)

ஹஸ்தம்: த்ரிபதாகம்.
பாதங்கள்: எண்ணிக்கையின் போது இடது காலைத்தூக்கி அதே இடத்தில் மிதிக்க வேண்டும்.
உடல் கைகள்: மாறுதல் இல்லை.
தலை, கண்கள்: மாறுதல் இல்லை.

5 6 7 8

எண்ணிக்கை 11. (7-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம்: த்ரிபதாகம்.
பாதம்: எண்ணிக்கையின் போது உயர எழும்பி இருகால்களையும் முன் பாதங்கள் (விரல்கள்) கீழே ஊன்றும்படி வைத்துப் பாதி யளவு உட்கார வேண்டும்.
உடல் கைகள்: மாறுதல் இல்லை.
தலை, கண்கள்: மாறுதல் இல்லை.

எண்ணிக்கை 12. (8-வது படத்தைக் காண்க)

ஹஸ்தம்: த்ரிபதாகம்.
பாதம்: எண்ணிக்கையின் போது வலது காலை மட்டிலும் மேல் தூக்கி மிதிக்கவும்.
உடல் கைகள்: முகத்தின் பக்கமாகத் திரும்பி யுள்ள வலது உள்ளங்கையைச் சபையோரைப் பார்த்திருக்கும்படியாகத் திருப்ப வேண்டும். கீழ்நோக்கி யுள்ள இடது உள்ளங்கையை மேல் நோக்கியிருக்கும்படி திருப்ப வேண்டும்.
தலை, கண்கள்: வலக் கையைத் தொடரவேண்டும்.

எண்ணிக்கை 13.

9-வது எண்ணிக்கையை இடது புறமிருந்து ஆரம்பித்துச் செய்ய வேண்டும்.

எண்ணிக்கை 14.

10-வது எண்ணிக்கையை இடது புறமிருந்து ஆரம்பித்துச் செய்ய வேண்டும்.

எண்ணிக்கை 15.

11-வது எண்ணிக்கையை இடது புறமிருந்து ஆரம்பித்துச் செய்ய வேண்டும்.

எண்ணிக்கை 16.

12-வது எண்ணிக்கையை இடது புறமிருந்து ஆரம்பித்துச் செய்யவேண்டும்.

தாளக் குறிப்பு:—

|4				0		0	
o	o	o	o	o	o	o	o
தை	ஹத்	தை	ய	தை	ஹத்	தை	ய
1	2	3	4	5	6	7	8

|4				0		0	
o	o	o	o	o	o	o	o
தை	ஹத்	தை	ய	தை	ஹத்	தை	ய
9	10	11	12	13	14	15	16

குறிப்பு:—பயிற்சி செய்யும் போது 1-வது காலத்தில் இரண்டு ஆவர்த்தங்களில் ஒரு பயிற்சியும், 2-வது காலத்தில் ஒரு ஆவர்த்தத்தில் ஒரு பயிற்சியும், 3:வது காலத்தில் ஒரு ஆவர்த்தத்தில் இரண்டு பயிற்சிகளையும் செய்ய வேண்டும்.

எழுத்தாளர்களுக்கு

இசை, சிற்பம், சித்திரம், பரதம் இவை பற்றிய, ஆதாரத்துடன் எழுதப்பட்ட, எளிய நடையில் அமைந்த கட்டுரை, சிறு கதை, சிறு நாடகம், கவிதை ஆகியவைகளுக்கு "நாட்டியத்தில்" சிறந்த இடமுண்டு.

கலையின் தனிப்பகுதிகளை எடுத்துக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள், சுவை பொருந்திய சிறுகதைகள், "உங்களுக்குத் தெரியுமா?" கலைத்துணுக்கு இவைகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு.

சிறந்த கட்டுரைகள், கதைகள், கலைத் துணுக்குகள், கலைவளர்ச்சிக்குத் தேவையான அழகிய கடிதங்கள் முதலியவற்றிற்குப் பரிசளிக்கப் படும். கலைத்துணுக்கு கலைஞர்களது வாழ்க்கையை ஒட்டியதாகவோ, கலையை ஒட்டியதாகவோ இருக்கலாம்.

"துணுக்கு" என்று கவரில் குறிக்கவும். போதிய தபால் பில்லைகளுடன் வந்த, வெளியிட இயலாத கட்டுரை முதலியன திருப்பி அனுப்பப்படும்.

கீழுள்ள விலாசத்திற்கு அனுப்புக:—

'நாட்டியம்'

49, கதீட்ரல் ரோட், சென்னை. 6

புதையல் 5

(பெ. தூரன்)

அருள்மலை நொண்டி

திருடன் ஒருவனைக் கதாநாயகனாக வைத்து ஒரு நூல் எழுத முடியுமா? ஏன் முடியாது? கதாநாயகர்களெல்லாம் மிக உன்னதமான குணம் படைத்தவர்களாகவே இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. விக்டர் உற்யூகோ எழுதிய லா மிசரப்லா என்ற பிரஞ்சு நாவல் உலகப் பிரசித்தி வாய்ந்தது. அதன் கதாநாயகனை ஜீன்வால்ஜீன் ஒருபக்காத் திருடன்தான். பாதிரியார்ஒருவரின் அன்பு காரணமாக அவன் வாழ்க்கை பிற்காலத்தில் முற்றிலும் மாறுபடுகிறது. அது வேறு விஷயம். அவன் திருடனாகவே தனது வாழ்க்கையைத் தொடங்குகிறான். தனக்கு உண்டியும் உறைவிடமும் அளித்த அச்சமயப் பெரியார் இலக்கியத்திலேயே களவு செய்கிறான். அவனுடைய வாழ்க்கை மிக அற்புதமாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

நமது தமிழ் இலக்கியத்திலேயே அதிலும் முக்கியமாகப் பழைய இலக்கியத்திலே இப்படித் திருடனை முக்கியப் பாத்திரமாக வைத்து எழுதப்பட்ட நூல்கள் இருக்கின்றனவா என்று நீங்கள் வினவலாம். உயர்குணம் வாய்ந்தவர்களையே தலைவர்களாகக் கொண்டு நூல் இயற்ற வேண்டும் என்பது பொதுவாகக் காப்பியத்தின் இலக்கணமாக இருந்து வருகிறது. ஆனால் மற்ற எல்லா நூல்களும் அவ்வாறிருக்க வேண்டுமென்ற நியதியில்லை. தமிழ் இலக்கியப்பாத்திரங்களின் குணத்தை ஆராய்ந்து பார்த்தால் அதில் பலவேறு வகையான குறைபாடுகள் இருப்பதை உணர்கிறோம். பெருமைகள் அதிகமாகவும் சிறுமைகள் குறைவாகவும் பலருக்கு இருக்கலாம். ஆனால் தன்னிகரில்லாத பெருமையே முழுக்க முழுக்க நிறைந்த குணம் படைத்தவர்களைக் காண்பது அருமை.

அதேபோல வாழ்நாள் முழுவதும் இழிகுணம் படைத்தவர்களாகவே இருக்கும் கதாநாயகர்களையும் காண்பது அருமைதான் மேலும் திருடனாகவே வாழ்க்கை தொடங்கும் கதாநாயகர்கள் தமிழ் நூலிலே உண்டா என்று நீங்கள் கேட்கலாம். இருக்கிறார்கள். நொண்டி நாடகத்தின் கதாநாயகன் ஒரு திருடன்தான். திருடன் என்றால் சாமானியமான திருடனல்ல. முதல் நம்பர்த் திருடன். அவனுடைய வாழ்க்கையையே முதலிலிருந்து கடைசிவரை இந்நூல் படம் பிடித்துக் காட்டுகிறது.

நொண்டி நாடகம் என்பது ஒரு வகைப் புதுப் பிரபந்தம். நாட்டுப் பாடல் இனத்தைச் சேர்ந்தது. திருடனாக வாழ்க்கை தொடங்கி அதன் விளைவாகக் கையும் காலும் வெட்டுண்ட ஒருவனைக் கதாநாயகனாகக் கொண்ட நூல் அது.

தமிழிலே பல நொண்டி நாடகங்கள் இருக்கின்றன. ஆனால் இதுவரை அவைகளில் எதுவும் அச்சு வடிவிலே தனி நூலாக வெளி வந்ததாகக் காணோம். அருள்மலை நொண்டியும் ஏட்டுச் சுவடியாகவே இருக்கிற ஒரு நொண்டி நாடகம்.

அருள்மலை நொண்டி தனது வாழ்க்கை வரலாற்றைத் தானே சுவைபடக் கூறுகிறான். அவன் பொல்லாத திறமை சாலி. எந்தக் காரியமும் அவனுக்கு எதிர் இல்லை.

"நீர்மேல் நடந் திடுவேன் - நட்டாற்று
நீச்சலிலே வெகு பாச்சலையா
ஆர்தான் எனக்கு நிகர் - பெரிய
ஆனையை மாலையாகப் போடுவேனையா
வானத்தை வில்லாக - எனக்கு
வளைக்கின்ற தொழிலது பழக்கமையா
மானற்ற மணலதனைக் - கையால்
வருத்தமில் லாமற்கயிறு திரித்திடுவேன்"

இவ்வளவு சமர்த்தன் ஒருநாள் பத்திரகாளிக்கு ஒரு கும்பிடு போட்டுச் சகுனம் பார்த்துப் புறப்படுகிறான், எதற்கு? திருடத்தான் சாமியார்போல வேஷம் புனைந்து கொண்டு,

"பாதக் குறட்டுமேலே - சுருக்காய்ப்
படக்குப் படக்கென்று நடக்கையிலே
வீதியில் கண்டபேர்கள் - காலில்
விழ்ந்தாரே சுற்றிச் சூழ்ந்தாரே
கொடுத்தேன் திருநீற்றை - கைகட்டிக்
கொண்டு குனிந்தே மெல்லத் தெண்டனிடு [வார்
படுப்பார் எழுந்திருப்பார் - திருநீற்றைப்
பாங்குடனே மெள்ள வாங்கிக் கொள்
வார்."

சாமியாருக்குச் சின்ன சுப்பையன் வீட்டிலே விருந்தும், இரவிலே தங்க வசதியும் கிடைக்கிறது. அருள்மலை நொண்டிக்கு ஒரு தனி அறநெறியுண்டு. அன்னமிட்ட வீட்டிலே கன்னமிடுவது அவன் தருமம். அதன்படியே தங்கியிருந்த வீட்டிலே களவாடிக் கொண்டு புறப்படுகிறான்.

இது நிகழ்ந்தது சென்னி மலையிலே. இரண்டாவது கொள்ளை சங்ககிரியிலே ஒரு கலியாண வீட்டில் நடக்கிறது. அங்கிருந்து புறப்பட்டு அருள்மலை நொண்டி பவானிக்கு வருகிறான்.

கோவிலிலே ஒரு இளங் கணிகை நாட்டியமாடிக்கொண்டிருக்கிறாள். அவளது ஆட்டிலும் அழகிலும் அருள்மலை நொண்டிக்கு நாட்டம் விழுந்து விடுகிறது. அவள் வீடே கதியெனப் போய்ச் சேர்கிறான்.

இரண்டு மாதங்கள் கழிகின்றன. தாய்க்கிழவி தந்திரமாக அவனிடம் உள்ள பொருளையெல்லாம் தட்டிப் பறித்துக்கொண்டு அவனை வீட்டை விட்டுத் துரத்தி விடுகிறாள்.

அருள்மலை நொண்டி பரிதேசியாகிறான். பிச்சையெடுத்து உண்டுகொண்டே காசிக்குப்

போகிறான். அரசனுடைய அரண்மனையிலே இவனுடைய திருட்டுக்கை வேலை செய்கிறது.

“கன்னக் கோலெடுத்தேன்—அருள்மலைக்
காங்கயன் தனைப்போற்றி ஓங்கியிடித்
[தேன்
வின்னப் படுத்திக்கொண்டேன் வீட்டுக்குள்
விளக்குகள் எரிகிற வெளிச்சங் கண்டேன்
சுரங்கத்தின் வாசலிலே—சொக்குப்பொடி
சூத்திர மந்திரத்தைத் தூத்தி விட்டேன்”

அரண்மனையிலே நகைகளுக்கும் பொருள்களுக்கும் சொல்ல வேண்டுமா, தூக்கக்கூடிய அளவு மூட்டை கட்டிக்கொண்டு.

“சிட்டுப் பறந்தாற் போல்—காசித்
தேசத்தை விட்டொரு மாசத்திலே
பட்டணந் தனையடுத்தேன்—சக்கிர
பாணித்துரைக் கஞ்சுபொன் காணிக்கை
[தந்தேன்”

சென்னைப் பட்டணம் விட்டுப் பவானி வருகிறான். பழைய ஞாபகம், பழைய மோகம் எல்லாம் திரும்பி விடுகின்றன. அருள்மலை நொண்டி மறுபடியும் அந்தக் கணிகை வீடு நுழைகிறான். பிறகு என்ன நடக்கிறது? கேட்பானேன்: இரண்டு மாதங்களிலே முன்போல அவன் ஓட்டாண்டி.

இந்தத் தடவை அவன் கால்கள் மைசூருக்கு அடியெடுத்து வைக்கின்றன. அங்கே ஒரு குதிரைப் பட்டாளம் தண்டு இறங்கியிருப்பதைப் பார்க்கிறான்.

“மேட்டிமை யாகநடந்து வந்தேன்—அந்த
வேளையில் குதிரைப் பாளையமுங் கண்டு
பக்கிரியென்று வேஷமுங் கொண்டேனே—நல்ல
பச்சைக் கல்லுக் காலில்கட்டிக் குச்சுக்
[குல்லா தரித்து
கைக்கிசைந்த துண்டுத்தடி கொண்டேன்-எந்தன்
கழுத்துக்குப் பாசியை அழுத்திக் கொண்
டேனே”

இரந்தேனே பாளையங்கள் தோறும்—அங்கே
எல்லாஞ் செயவே அல்லா அல்லா என்
[றேன்
ரட்டைத் துட்டுத் துக்காணி தந்தாரே—குதிரை
ராவுத்தர் திறத்தையெல்லாம் ராவெத்தவே
[பார்த்தேன்”

குதிரைப் படைக்குள் புகுந்து பிச்சை வாங்கிக் கொண்டே இரவை எதிர்பார்க்கிறான். எந்தக் குதிரையைக் களவாடுவது என்று முன்னாலேயே சுழி சுத்தம் பார்த்துத் தீர்மானம் செய்து கொண்டான். பணம் கொடுத்து வாங்குகிறவன் தனது பொருள் நிலைமையை உத்தேசித்துக் குதிரையைத் தீர்மானம் செய்வான். திருடுகிறவனுக்கென்ன, உள்ளவற்றில் மிக நல்லதையே அவன் தேர்ந்தெடுத்தான்.

“திக்கெனவே தானெழுந்து—குதிரை
திருடவே நானந்த இரவில் வந்து
சொக்குப்பொடி கையிலெடுத்தேன்—படைமன்
[னர்
துக்கத்தைச் சோதித்துப் பாராக்கிரமித்து
அசுவந்தனை யடுத்து—க்ஷணத்தினில்
அச்சமற்றுக் குதிரையை நொச்சுக் கூட்டி
[னேன்
சும்மா இருந்ததையா—முதுகைத்
தட்டியே பின்கால்தான் நெட்டை வாங்கி
[னேன்
கால்கயிறு தனையறுத்தேன்—குதிரைக்குக்
கடிவாள மீட்டனையா தடையில்லாமல்
ஆக்கிரமித்து அனுமானித்து—குதிரையும்
ஆட்டங் கொண்டே வெகுசேட்டை செய்
[யவே
வேத்தா னென்றறிந்துதான்—குதிரை
மிரண்டு தையா படை திரண்டுதையா”.

பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவானல்லவா? அருள்மலை நொண்டியும் அகப்பட்டான்; திருடன் பிடிபட்டால் சும்மாவிடுவார்களா? அவனுடைய ஒரு காலையும், ஒருகையையும் வெட்டி விடும்படி உத்தரவு பிறக்கின்றது.

அது வரையில் ஊனமில்லாது கட்டிளங்காளையாக இருந்த அவன் நொண்டியாகிறான். அவன் தன் கதியை எண்ணிப் புலம்பித் தன்னந் தனியாகக் காட்டு வழியிலே கிடக்கிறான். தனது கேவலமான செயல்களை எண்ணி மனம் வருந்துகிறான். இனிமேலாவது புதியதோர் நல்வாழ்க்கை நடத்த வேணுமென்று சிந்திக்கிறான்.

அது சமயம் வட தேசத்திலிருந்து சில யாத்திரிகர்கள் அவ்வழியாக வருகிறார்கள். அவர்களுக்கு இவன்மேல் இரக்கம் பிறக்கின்றது. அவர்கள், “கொங்கு நாட்டிலே அருள்மலை என்ற ஒரு திவ்ய க்ஷேத்திரம் இருக்கிறது. அதன் பெருமையை நீ உணராயோ? அங்கே கோயில் கொண்டிருக்கும் முருகனை வழிபட்டால் உனது இடரெல்லாம் தீரும்” என்று சொல்லுகிறார்கள்.

திருடன் மனத்தூய்மை பெற்று அருள்மலையை அடைந்து தவங்கிடக்கிறான். முருகன் திருவருளால் வெட்டுண்ட கால் கைகள் பழையபடி வளர்ந்து விடுகின்றன.

அருள்மலை நொண்டியின் கதை அத்துடன் முடிவடைகிறது. இதை நாடகமாகக் கிராமங்களிலே நடிப்பதுண்டு. ஏட்டுச் சுவடியிலிருந்த இந்நூலைப்பற்றி நான் குறிப்பிட்டபோது பல முதியவர்கள் இதை அப்படியே மனப்பாடமாகப் பாடிக் காண்பித்தார்கள். அதனால் சுமார் இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வரையில் இம்மாதிரி நாடகம் நடிக்கப் பெறுவது சகஜமென்று அறிந்தேன்.

கிராமங்களிலே இன்று இம்மாதிரியான பொழுது போக்குகள் அருகி வருகின்றன. இவற்றையெல்லாம் மறுபடியும் மலரவைப்பது கிராம மக்களின் மகிழ்ச்சிக்கும் கிராமியக் கலைகளின் மறுமலர்ச்சிக்கும் காரணம் ஆகும்.

அருள்மலை நொண்டி முழுவதுமே செய்யுளாக இயற்றப்பட்ட நூல். வெவ்வேறு சந்தங்களில் பாட்டுக்களும், இடை யிடையே விருத்தங்களும் உள்ளன. இது சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதென ஊகிக்கலாம். சுயசரிதமாக அமைந்த இந்நூல் சுவையுடன் கூடிய நாட்டுப் பாடலாக அமைந்திருக்கிற து.

கலைத்துறைத்து

● என்னமோ கவலையா? என்ன மோ கவலையா?

அண்ணாமலை சர்வ கலாசாலையில் 1940-ம் வருடம் மிக விமரிசையாக, தியாகப் பிரும்ம உத்ஸவம் கொண்டாடினார்கள். கடைசிநாள் கச்சேரிக்கு, **சங்கீத பூபதி விஸ்வநாதையர்** அவர்களை ஏற்பாடு செய்திருந்தது. சாஸ்திரி ஹாலில் கச்சேரி கேட்பதற்காக அநேகர் வந்திருந்தனர். ஆனால் கச்சேரி ஏற்பாடு செய்தவர்களுக்கும், சங்கீத அபிமானிகளுக்கும், முக்கியமாக மகாராஜபுரம் விசிறிகளுக்கும், அன்று மாணாக்கர்கள் ஏதாவது கலாட்டாவோ, குழப்பமோ செய்யாமல் இருக்க வேண்டுமே எனக் கவலையாயிருந்தது.

அன்று கச்சேரி வெகு "ஜோர்". கலாட்டா செய்வதில் நிகரற்றவர்கள் கூட, அன்று, "மந்திரத்தால் கட்டுண்டு மயங்கியிருக்கும் சர்ப்பம் போல்", வெகு ஆவலுடன் பாட்டை ரசித்த வண்ணம் இருந்தார்கள். எங்கள் எல்லோருக்கும் வெகு ஆனந்தம். செவிக்கினிய விருந்து கிடைத்தது ஒரு புறம். மாணாக்கர்கள் அமைதியாய் பாட்டை ரசித்தது ஒரு புறம். அன்று பலத்த கரகோஷத்திற்குப் பிறகு, கச்சேரி முடிந்தது.

கச்சேரி முடிந்த பிறகு, ஓரிடத்தில் பல சங்கீத அபிமானிகளும், மகாராஜபுரம் விசிறிகளும், அவரைச் சூழ்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, மியூஸிக் காலேஜ் பிரின்ஸ்பால் **டைகர் வரதாசாரியார்** அவர்கள் அன்றையக் கச்சேரியை வெகுவாகப் புகழ்ந்து விட்டுக் கடைசியில், "என்னமோ அண்ணா! பையன்களெல்லாம் ஒரு சப்தமும் பண்ணாமல் இருக்க வேண்டுமே" என்று **எனக்கு என்னமோ கவலை**யாகத்தான் இருந்தது. என்றார். அதற்கு மகாராஜபுரம் "உங்களுக்கு என்னமோ கவலையாக இருந்ததே, அதை நான் **என்ன மோகவலையாக்கி** விட்டேன் பார்த்தீர்களா" என்றார்.

அங்கு இருந்தவர்கள் எல்லோரும் மகாராஜபுரத்தின் கல்பனா சக்தி சதாரணப் பேச்சில் கூடப் பரிமளிப்பதைக் கண்டு, மிக வியந்தனர். 23

● சுடக் குடிச்சி!

மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள் ஒரு சிறந்த கலா நிபுணர். பாட்டோ, நடனமோ அவர் முன்புதான் அரங்கேற்றப் படுத்துவது வழக்கம். பிரசித்திப் பெற்ற **திருவாரூர் ஞானம்** தன்னுடைய பேத்திக்கு அபிநயம் சிட்சை சொல்லி வைத்து, ராஜு சாஸ்திரிகளிடம் சென்று ஆசீர்வாதம் பெற்றுவர, பேத்தியை அனுப்பினாள். அவளும் ராஜு சாஸ்திரிகள் முன்பு சென்று வணங்கி சில பதங்களுக்கு அபிநயம் பிடித்துவிட்டு, ஞானத்திடம் வந்து சேர்ந்தாள். வந்ததும், ஞானம் அவளைப் பார்த்து "சாஸ்திரிகள் என்ன சொன்னார்?" என்று கேட்டாள்.

பேத்தி: "ஒன்றும் சொல்லவில்லை!"

ஞானம்: "ஒன்றுமே சொல்லவில்லையா?"

பேத்தி: "சுடக் குடிச்சி!" என்று சொன்னார். வேறு ஒன்றுமே சொல்லவில்லை."

ஞா: "அந்த வார்த்தையை எப்பொழுது சொன்னார்? ஞாபக மிருக்கிறதா?"

பே: "பாலைக் கறந்து, அடுப்பில் வைத்துக் காய்ச்சி, அதைப் பாத்திரத்தில் விட்டுக் குடிப்பதாக அபிநயத்தில் ஒரு நிகழ்ச்சிக் கட்டம்... அப்படி குடிக்கும் பொழுது சாஸ்திரிகள் 'சுடக் குடிச்சி' என்று சொன்னார். அதன் விபரம் எனக்கு விளங்கவில்லை."

ஞா: "அடி பயித்தியக்காரி! காய்ச்சின பாலைப் பாத்திரத்தில் விட்டு ஆற்ற வேண்டாமா? நீ அப்படியே குடிக்கிற பாவனையாகக் காண்பித்து விட்டாய். அதனால்தான் அவர் அப்படிச் சொன்னார்', என்றாள். 24

● அண்ணாவின் ஸ்பாவம்

ஒரு பிரபுவின் வீட்டுக் கல்யாணக் கொட்டகையில் **கும்பகோணம் பஞ்சாபகேச சாஸ்திரிகளின்** கதை நடந்தது. அந்தக் காலத்தில், மின்சார விளக்குகள் இல்லை. 'வாஷிங்டன்' விளக்குகளைத் தான் விசேஷ காலங்களில் உபயோகிப்பார்கள். பாதி கதையில் கொட்டகையில் இருந்த ஒரு விளக்கு கொஞ்சம் மக்கர் பண்ண ஆரம்பித்தது. இதைப் பார்த்த அந்த வீட்டுக் காரியஸ்தர் விளக்கில் உள்ள பிடியைத்

திருப்பிச் சரிப்படுத்த ஆரம்பித்தார். ஆனால் ஒன்றிலும் கட்டுப்படாத விளக்கு இரண்டு நிமிஷத்தில் நின்று விட்டது. சபையோரிடம் உபாயமான பரிகாசச் சிரிப்பு ஏற்பட்டதைக் கண்ட பாகவதரவர்கள் "அண்ணு அவர்களுக்கு (காரியஸ்தருக்கு) எல்லாவற்றையும் ஸமயம் போல் அணைத்துக் கொண்டு போகும் ஸ்வபாவம்" என்று சொன்னவுடன், எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். 25

● ஸபாஷ்! அழக நம்பி!

ஸங்கீத கலாநிதி பழமார்நேரி ஸ்வாமிநாத அய்யர் அவர்களுக்கு **மிருதங்கம் அழக நம்பியா பிள்ளையிடம்** நல்ல மதிப்பும் பிரியமும் உண்டு. ஒரு சமயம் பண்டுருட்டியில் நடந்த அவருடைய கச்சேரியில் அழக நம்பி மிருதங்கம் வாசித்தார். அன்று மிருதங்கத்தின் கண்கள் சுருதியில் சேராமல் இடைஞ்சல் செய்ய ஆரம்பித்து விட்டன. ஆனால் பிள்ளையவர்கள் அதை ஸபையோருக்குக் காட்டாமல் மெதுவாய்த் தட்டிப் பார்த்துக் கொண்டே வந்து, சேர்ந்திருந்த கண்ணையே வைத்துக் கொண்டு வாசித்து கச்சேரியைப் பரிமளிக்கச் செய்தார். இதைக் கண்டு மிகுந்த ஸந்தோஷமடைந்த அய்யரவர்கள் "ஸபாஷ்"! அழக நம்பி! மற்ற மிருதங்கக் காரர்களுக்கு எல்லாக் கண்களும் ஸரியாய் இருந்தால் கூட பரிமளிக்க மாட்டேன் என்கிறது. ஆனால் உனக்கு ஒரு கண்ணே போதுமப்பா !" என்று சிலேடையாய்ப் கூறிப் புகழ்ந்தார். 26

● நாம் எங்கிருக்கிறோம்?

சூலமங்கலம் ஸீதாராம பாகவதரவர்களின் கதை செட்டி நாட்டில் நடந்தது. அன்று பாகவதர் வெகு ஸ்வாரஸ்யமான உபகதை ஒன்றைச் சொல்லி வந்தார். உபகதை வளர்ந்து விட்டது. ஜனங்களும் ரஸமாய் அனுபவித்து வந்தார்கள். கடைசியில் பாகவதரவர்களுக்கு நாம் எதற்காக இந்த உபகதையை ஆரம்பித்தோம் என்பது மறந்து விட்டது.கதையை விட்ட இடம் தெரியாததால் பின்பாட்டுக்காரரைப் பார்த்து "இப்போது நாம் எங்கே இருக்கிறோம்" என்று கேட்டார்! பின் பாட்டுக் காரருக்கும் இடம் மறந்துவிட்டது. ஆகையால் அவர் பாகவதரைப் பார்த்து "நாம் இப்போது ஆனு, ரூனு, ராவன்னு, மானு சாத்தப்ப செட்டியாரவர்களின் வீட்டுக் கல்யாணக் கொட்டகையில் நின்று கொண்டிருக்கிறோம்" என்றார். பாகவதருக்கும் சிரிப்புத் தாங்கவில்லை. நல்ல வேளையாய் மிருதங்கக்காரர் ஞாபகப் படுத்தவே, கதையைத் தொடர்ந்து முடித்தார். 27

● விடாக் கண்டன்

நடேச பாகவதர் நல்ல படிப்பாளி. சென்னை தம்புச் செட்டித் தெருவில் அவர் கதை செய்கையில் அங்கு ஒரு கிழவர் வந்து சேர்த்தார். பாகவதர் அநேக மேற்கோள்களுடன் ஸ்வாரஸ்யமாய்க் கதையைச் சொல்லிக் கொண்டு வருகையில் கிழவருக்கு, தானும் ஒருவித்வான் என்பதை எல்லோரும் அறிய வேண்டும் என்று தோன்றியபடியால் அடிக்கடி குறுக்கே பேச ஆரம்பித்து விட்டார். முதலில் "இது ரகுவம்ச சுலோகமல்லவா !" என்றார். பாகவதரோ இவ்வரை லக்ஷியம் செய்யாமல் மேலே கதையைச் சொல்லி வருகையில் "ஸரிதான்! இது போஜ சம்பு சுலோகம்!" என்றார். இவரை ஒரு முறை விழித்துப் பார்த்து விட்டு பாகவதர் கதையில் ஈடுபட்டார். சிலநிமிஷங்களுக் கெல்லாம் "கம்பராமாயணச் செய்யுளின் அபிப்பிராயத்தை வசன நடையாய்ச் சொல்லி விட்டீர் ! இதென்ன பிரமாதம்! என்றார். பாகவதர் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு தன் கதையை மறுபடியும் தொடர்ந்தார். "அடாடா! இது பவபூதியின் சுலோகமல்லவா" என்றவுடன், அனுவசியமாய் அடிக்கடி இவர் கதையில் குறுக்கிடுவதைச் சகியாத பாகவதர் "ஓய்! வாயை மூடிக் கொண்டு சும்மா யிருக்கிறீரா! அல்லது உம்மை வெளியில் கொண்டு போய் விடச் சொல்லட்டுமா ?" என்று கோபமாய்ச் சொன்னார். எதற்கும் பின் வாங்காத அந்தக் கிழவர் "பாகவதர் வாள்! சபாஷ்!! இப்போதாவது "நிச்சயமாய் உங்களுடையது தான் என்று எண்ணக் கூடிய அளவில் சில வார்த்தைகளையாவது கேட்டேனே! ரொம்ப ஸந்தோஷம்!! நான் போய் வருகிறேன்" என்று கிளம்பி விட்டார். 28

● இவைகள் எல்லாம் இப்ரஹீம் ராவுத்தரைச் சேர்ந்தவை!

சென்னை சபையில் அன்று **திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரியார்** கதை. அவர் வருவதற்கு அன்று கொஞ்சம் தாமதமாகி விட்டபடியால் அவர் உள்ளே நுழைந்தது முதல் மேடைக்குப் போகும்வரை ஜனங்கள் விடாது கரகோஷம் செய்தார்கள். இதைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாத பாகவதரவர்கள் வழக்கம் போல் சுருதியைச் சேர்த்துக் கொண்டு கதைக்கு ஆரம்பித்தார். இவர் எழுந்து நின்றவுடன் சில ஜனங்கள் மறுபடியும் கரகோஷம் செய்ய ஆரம்பித்தார்கள். பாகவதரவர்கள் எல்லோரையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு "நான் நான்கு மணிக்கே ஜட்கா வண்டியில் புறப்பட்டு விட்டேன். 'ராவுத்தருக்குத் தெற்கே பிரயாணம் குதிரைக்கு வடக்கே பிரயாணம், என்று ஒரு வசனம் உண்டு. அதுபோல் அந்தக் குதிரை ரொம்ப தொந்தரவு கொடுத்து விட்டது. பாவம்! அந்த வண்டிக்கார சாயபு எப்படியோ அதைச் சமாளித்து என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்து விட்டான்; நீங்களோ ஓயாமல் கரகோஷம் செய்து விட்டீர்கள்!!" என்று சொல்லி முடிப்பதற்குள் மறுபடியும் கரகோஷம் செய்தார்கள், பாகவதரவர்கள் "எனக்கு பாத்யமில்லாதவைகளை நான் எப்படி அங்கீகரிக்க முடியும்? ஆகவே இவைகள் எல்லாம் வண்டிக்காரன் இப்ரஹீம் ராவுத்தரைச் சேர்ந்தவை" என்று கூறி முடித்தார். 29 ●

—**கோட்டு வாத்யம் துரையப்ப பாகவதர்**

கர்வ பங்கம்

'கன்னி'

சக்ரவர்த்திசமுத்ரகுப்தர் சிறந்த வைணிகர். அறிவுக்கேற்ற அடக்கமுள்ளவர். ஒரு நாள் சபாமண்டபத்தில் வீணையை இசைத்துக் கொண்டிருந்தார் அவர். அரசர் சந்தோஷத்துடன் இருக்கும் பொழுது தன் காரியத்தை முடித்துக்கொள்ள சில பிரதானிகள் எண்ணினார்கள். அரசரிடம் சென்று மன்னவ! கதி கமக சுத்தங்களுடன் வீணையை மீட்டுவதில் தங்களுக்கு நிகர் ஒருவருமில்லை. திரிலோக சஞ்சாரி நாரதர் கூடத் தங்கள் ஞானத்தைக் கண்டு தலை குனிய வேண்டியதுதான், என்று முகஸ்துதி செய்தார்கள். திடுக்கிட்டார் சக்ரவர்த்தி. பிரதானிகளின் அசட்டுத்தனம் அவருக்குக் கசந்தது. நல்ல பாடம் கற்பிக்க நினைத்தார்.

"பிரதானிகளே! நீங்கள் புகழ்ந்ததைக் கேட்டவுடன் புளகாங்கித மடைந்தேன். ஆனால் நாரதருடைய பெயரைக் கேட்ட வுடன் தான் பகீரென்றது." என்றார். பிரதானிகளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அரசன்



தங்களைத் தவறாக நினைத்து விட்டாரோ என்று திகில் ஒரு புறம். நாரதரைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் ஆசை. மென்று விழுங்கினார்கள். பார்த்தார் சமுத்ர குப்தர். பிரதானிகள் படிப்பதற்குச் சரியான பள்ளிக்கூடம் தானாகவே அமைந்திருந்தது. கதையுடன் தன் கருத்தையும் கூறத்தொடங்கினார்.

"நாரதரைப் பற்றிஉங்களுக்குத் தெரிந்தது இவ்வளவுதானா? அவருக்கு ஏற்பட்ட அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் என்னை இம் மாதிரி முகஸ்துதி செய்யத் துணிய மாட்டீர்கள்! கரை புரண்டு செல்லும் நதியை நினைத்துப் பாருங்கள். கரை மேலிருக்கும் மரங்களையும் பிரவாஹத்தால் கீழே சாய்த்துத் தெளிந்த தன் நீரையும் கலக்கிக் கொள்கிற தல்லவா அது. புகழ்வதாக நினைத்து என்னை மட்டிலு மல்லாமல் - சங்கீதத்தையும் நீங்கள் பழிக்கிறீர்கள். இந்த முயற்சி வேண்டாம்" என்றார் சமுத்ர குப்தர். லேசாக ஒரு சோகத்திரை பிரதானிகள் முகத்தில் படர்ந்தது. தொடர்ந்து கூறினார் சக்ரவர்த்தி.

'நாரதரின் கதையைக் கேளுங்கள்! அவர் சங்கீதத்தின் ஆழத்தை அறிந்தவர் என்று உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அந்த மகா முனிவர் உங்களைப் போன்றவர்களின் புகழுரைகளைக் கேட்டுத் தனக்கு நிகர் வேறொருவருமில்லை என்று கர்வ மடைந்தார். எவ்விடம் சென்றாலும் ஆடம்பரப் பிரியர்களின் சொற்களைக் கேட்கத் தவறுவதில்லை. மண்ணுலகத்திலோ, விண்ணுலகத்திலோ யாரைச் சந்தித்தாலும். சங்கீதத்தில், தான்

அடைந்துள்ள பெருமையைச் சொல்லிக் கொள்வதில் அவருக்கு அலாதியான சந்தோஷம்.

கண்ணனுக்கு நாரதரின் இந்த கர்வம் சிறிதும் பிடிக்க வில்லை. எப்படிப் பிடிக்கும்! கர்வம் நாரதரின் கௌரவத்தைச் சிதைத்துக் கொண்டிருந்தது. இது சகிக்குமா கண்ணனுக்கு? கர்வ பங்கத்திற்குச் சரியான பருவத்தைப் பார்த்திருந்தான் பரந்தாமன்.

ஒருநாள் கண்ணனிடம் தன்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் நாரதமுனி. தருணம் அறிந்த தாமோதரன், "நாரதரே! உமது சங்கீதப் பிரபாவம் உமையவளுக்கும் சிவபிரானுக்கும்கூட எட்டியிருக்கிறது. ஸாமகானப்பிரியருடைய சந்நிதானத்தில் உம்முடைய வீணை கானத்தைக் காட்டவேண்டாமா? நாளைக்கே அங்கு போகவேண்டும் என்பது என் எண்ணம்; என்ன சொல்லுகிறீர்? என்றார். முனிவர் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது. மறுநாள் நாரதரும் கிருஷ்ணனும் கைலைக்குப் புறப்பட்டார்கள். மணியிழைத்த மண்டபம் ஒன்று வழியில் தென்பட்டது. சமீபம் வர வரச் சோகம் நிறைந்த குரல்கள் பல காதில் விழுந்தன. அழகுள்ள வனிதையர் பலர் தாறுமாறுகக் கிடந்தார்கள். அப்போதுதான் ஏற்பட்டதோ என்று எண்ணும்படியாக அவர்களுடைய அங்கங்கள் சிதைந்து காணப்பட்டன. கண்களில் நீர் சுரக்க தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார்கள் அவர்கள். சிலருக்குக் காதுகள் இல்லை. சிலருடைய கண்கள் பிதுங்கியிருந்தன. பெண்களென்றே பலரைக் கண்டு கொள்ள முடியவில்லை. முடமாகி முனகிக் கொண்டிருக்கும் பெண்களைப் பார்க்க சகிக்காத முனிவர் முகுந்தனைப் பார்த்து மாதவா! இதெல்லாம் யார் செய்த அலங்கோலம்! தேவர் உலகத்திலுமா துன்பமும், கொடுமையும்? காணவும் அல்லவா கண் கூசுகிறது. அப்பாவிகளான இவர்களைப் பாழ்படுத்திய பாவி யார்? இம்மடந்தையர்கள் என்ன பாவம் செய்தார்கள்! அல்லது உம் லீலா விநோதங்களில் ஒன்று, காட்டி விளையாடுகிறீரா! எனக் கொன்றும் விளங்க வில்லையே என்றார் விசனத்துடன்.

"நீர்தான் அவர்களை விசாரியுமே? தானே தெரிகிறது, ஏன் தொண தொண என்கிறீர்" என்று கோபாலன் கூறிவிடவே

நாரதர் அவர்களை அணுகி, "மங்கையர் திலகங்களே! உங்களுக்கு இந்தக் குறைபாடுகள் ஏன்? எங்கிருப்பவர்கள் நீங்கள்? இவையெல்லாம் யார் இழைத்த கொடுமை? என்று அனுதாபத்துடன் வினவினர். பெண்கள் புலம்பியவாறு ஏதோ சொன்னார்கள், "ஐயோ! நீங்கள் எங்கள் புண்ணடைந்த நெஞ்சில் ஏன் கோலிடுகிறீர்கள். உங்கள் அனுதாபத்துக்குப் பாத்திரமாகிய நாங்கள் ராகினிகள். அதோ தவிக்கிறார்களே தாள தேவதைகள். பவப்ரியா அதோ புலம்புகிறாள். துண்டான காலைப் பார்த்துக் கொண்டே கதறுபவள் கல்யாணி. நெஞ்சைத் தடவிக்கொண்டு திணறுபவள் ரஞ்சனி. ரதி மதிப்பிரியாவைப் பாருங்கள்! விழுந்து விட்ட விழிகளைத் தடவித் தடவித் தேடுகிறாள். பெரியவரே! பேசி யென்ன பயன்? நாரதர் என்று கேட்டதில்லையா நீங்கள்? வீணை வாசிப்பதாக நாணமில்லாமல் சொல்லிக் கொள்கிறனே, அவன் வாசித்தானே, இல்லை வதைத்



தானே, இப்படியாக்கிவைத்திருக்கிறன் எங்களை. இந்த லக்ஷணத்தில் சங்கீதத்தில் தன்னை மிஞ்சியவன் இல்லை யென்று சாதிக்கிறனும். அனுமாரிடம் ஒரு முறை அவமானப்பட்டத்தை மறந்து விட்டானே என்னவோ யார் சொல்வது? நீரே சொல்லும்? இது நியாயமா! கண்ணனுக்கும் இது கண்ணில்பட வில்லை யென்று எண்ணும் போதுதான் எங்களுக்குப் பொறுக்கவே முடியவில்லை."

நாரதருக்கு நாக்கு உலர்ந்து போய்விட்டது. பிரமையும் பச்சாத்தாபமும் கலந்து ஒருவாறு பேசினார் "மங்கையர் திலகங்களே மன்னிக்க மாட்டீர்களா? நான்தான் அந்த மகாபாவி நாரதன்' அடுத்தபடி பேசமுடிய வில்லை. அழுகையே வந்து விட்டது. "வீணையைத் தொடுவதற்கே அருகதை யில்லாதவன்! நான்............இதை அலங்காரமாக வைத்திருப்பதை விட உடைத்து விடுவதே மேல் என்று ஆவேசத்துடன் வீணையை உடைக்க முயன்றபோது யாரோ கையைப் பிடித்துக் கொண்டதை உணர்ந்து திரும்பினார். கிருஷ்ணன் நின்று கொண்டிருந்ததுடன் 'ஆத்திரம் கொள்ளாதீர்! உமது பேரில் தப்பில்லை. முகஸ்துதிப் பிரியர்களின் புகழுரைகளைக் கேட்டு விட்டு மோசம் போயிருக்கிறீர்.

"வீணையை உடைத்து, வாசிப்பதை நிறுத்துவதைவிட, அதை வாசிக்கும்போது குற்றங் குறைகளை உணர்ந்து அதை நீக்க முயலும்.

நீர் வீணையை உடைத்து விட்டால் இந்தக் கன்னி கையின் கதியென்ன! என்றார் பாண்டவ பந்து. நாரதருடைய கர்வம் கண்ணீராக மாறிக் கரைந்து விட்டது. தெளிவடைந்தது உள்ளம். கண்ணா! இப்பொழுது நான் சிவபிரானின் சந்நிதானத்தில் பாட லாயக்கற்றவன்! குற்றங் குறை யில்லாமல் வாசிக்கக் கற்றுக்கொண்டு, மறுபடியும் இம்மண்டபத்தின் வழியாக வந்து சரிபார்த்த பிறகே கைலாசபதியின் முன்பு கானஞ் செய்யமுடியும். அதுவரை நடராஜரிடம் நான் வரமுடியாது'' என்று கூறிவிட்டு மங்கையரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

“பிரதானிகளே! அரசன் விளித்ததைக் கேட்டுப் பிரதானிகள் பூமிக்கு வந்தார்கள். நாரதர் கதி இது, நீங்களோ முகஸ்துதி செய்கிறீர்கள். என் கதி என்ன இப்போது? என்றார் குப்த சக்ரவர்த்தி. ●

● ● ●

மதிப்புரை

(1) **இனையாள் முதலிய கதைகள்.** ஆசிரியர்: “பிரேம்சந்த்”—மொழி பெயர்த்தவர்—ஸ்ரீ. N. ரங்கநாதராவ். பிரசுரகர்த்தர்கள்:- மூர்த்தி பிரசுராலயம், மதராஸ்-18. விலை ரூ. 2—0—0.

தமிழில் சுவை நிரம்பிய பல காப்பியங்களும், நாவல்களும், சிறு கதைகளும் மலிந்து காணப்படினும் தமிழ் மக்கள் தமது மொழியில் அமைந்துள்ள நூல்களை மட்டும் படித்துச் சுவைப்பதோடு நின்றுவிடாமல், பிற மொழிகளில் அமைந்துள்ள சிறந்த சிறு கதைகள் முதலியவற்றையும் மொழி பெயர்த்துக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுவதனால், இம் மொழி பெயர்ப்புக் கதைகளும் மக்கள் செவிக்கு விருந்தளிக்கும் என்ற நோக்குடன் ஸ்ரீ. என். ரங்கனாதராவ், பேராசிரியர் பிரேம் சந்த் உருது பாஷையில் எழுதிய கதைகளை அவற்றின் அழகு கெடாமல் சிறந்த முறையில் மொழி பெயர்த்துத் தமிழ் மக்களுக்கு உதவியுள்ளார். இந் நூலில் உள்ள சிறு கதைகள் அனைத்தும் படிப்போரின் உள்ளத்தைப் பரவசப் படுத்தும் பெற்றி பெற்றவை என்பதிற் சிறிதும் ஐயமில்லை யாதலால் அவசியம் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூலாகும்.

(2) **தொழில் மணி:**—(மாத வெளியீடு—ஆசிரியர் T. மரிய ஜோசப். கிடைக்குமிடம்: தொழில் மணி காரியாலயம், 3/4 செல்ல பிள்ளையார் கோயில் தெரு, புதுப்பாக்கம், மதராஸ்-14. தனிப் பிரதி அணா 2.

தொழிலாளரின் ஒற்றுமையை வளர்க்கவும், தொழிலாளரின் வாழ்க்கை நிலை உயரவும், நம் நாட்டுக் கைத்தொழில்கள் வளரவும், உழைப்பாளிகளின் உள்ளத்தில் உணர்ச்சியையும், உவகையையும் உண்டாக்கவும் “தொழில் மணி” தொண்டாற்றும் என்று நம்புகின்றோம்.

(3) **வீணை** :—ஆக்கியோன்—கோட் வாத்தியம் V.S. பார்த்தசாரதி அய்யங்கார். கிடைக்குமிடம்:—ஸ்ரீ கான வித்யா பிரஸ், ஸ்ரீவைகுண்டம்.

வீணை கற்போர் ஸங்கீத சாஸ்திரத்தில் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களும், வீணை வாசிப்பதற்குச் சாதகமான முறைகளும், ஆரம்ப வரிசைப் பாடங்களும் இந் நூலில் அடங்கியுள்ளன. எக் கலையையும் ஆசிரியர் உதவியின்றிச் சிறந்த முறையில் தாமே கற்பது என்பது இயலாது. எனினும் மிகுந்த ஆர்வமுடையோர் இந் நூலினால் பயன் பெறலாம் என்பது நிச்சயம்.

(4) **ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சரித்திரம்:**—ஆசிரியர் P. K. மூர்த்தி—Dip—Mus. கிடைக்குமிடம்:-மூர்த்தி பப்ளிகேஷன்ஸ், சென்னை-18. விலை ரூ. 1.

இந்நூலில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாறு மிகச் சுருக்கமாக அமைந்துள்ளது. நம் நாட்டில் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பலர் அறிந்திருப்பினும் அவருடைய சிஷ்ய பரம்பரையைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. ஆனால் இந் நூலைப் படிப்பவர்கள் ஸ்வாமிகளின் சிஷ்ய கோடிகள் யார் யார் என்பதையும் அறியலாம். மேலும் பிரம்மஸ்ரீ மாங்குடி ராமனாத பாகவதர் அவர்களால் ஸ்வரப்படுத்தப் பட்ட சில கீர்த்தனைகளும் இப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(5) **சரபேந்திரர் வைத்திய முறைகள்:**—தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு-2 **விலை ரூ. 4** இந்நூலில் அனுபவ ஸித்தமான அநேக முறைகள் அடங்கியிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ் வைத்திய நூல் மிக அவசிசமாகும்.

(6) **வெல்லூல் கெஜட் - வெல்லூர்** :—வரப் பெற்றோம்.

ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர் க்ருதி

[செம்மங்குடி ஸ்ரீநிவாஸ ஐயர்]

பல்லவி

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யோ மாம் ரக்ஷது
ஷண்முகாவதார: சக்திருப: (ஸ்ரீ)

அனுபல்லவி

பாஸமான வல்லீதேவஸேனோ
பாரதீசாதி தத்வபோ தனோ
வாஸவாதி வந்தி தசுப சரணோ
பத்ரவிபூ திப்ரதான நிபுண: (ஸ்ரீ)

சரணம்

சதகோடி பாஸ்கர சோபபாகர:
சிஷ்டசிதி கண்டாத்மஜ: சிவகர:
ப்ரதாப தாரகாதி ஹரதீர:
ப்ரபல கணேசாநுஜ ஷட க்ஷர:
சதாயு: ப்ரத பக்தமந்தார:
சங்காபிஷே காத்யுபசார:
க்ஷிதீசபூஜித திவ்யாம்பர:
நவவீராநந்த வரகுருகுஹ: (ஸ்ரீ)

ராகம்: தோடி.
தாளம்: ஆதி (2 களை)

ஆரோஹணம்:
அவரோஹணம்:

பல்லவி

	+	1	2	3	
1.	கா ;	மா ;	ம த கா ,	க ரி ரீ ,	|
	ஸ்ரீ .	ஸு .	ப்ரம் . .	மண் . .	
2.	கா ;	மா ;	ம தா ம	க ம க ரி	|
	ஸ்ரீ .	ஸு .	ப்ர ம் ,	ம ண் . .	
3.	கா ;	மா ;	ம தா ,	த மா த நி த	|
	ஸ்ரீ .	ஸு .	ப்ர ம் .	ம ண் . . .	
	தா ;	தா தப	த ம மா	ம பா க	|
	ஷ ண்	மு கா .	. . வ	தா . .	
4.	கா ;	மா ;	ம தா ம	தா , நி ஸ்ா	|
	ஸ்ரீ .	ஸு .	ப்ர ம் .	ம . ண் .	
	தா ;	தா த பா த	நி த தா	தா , நி ஸ் நி	|
	ஷ ண்	மு கா . .	. . வ	தா	
	கா ;	மா த ப ப ம கா, ரி	ரி ஸ ரி நி	தா நீ	|
	ஸ்ரீ ,	ஸுப்ரம்மண் யோ .	மா . . ம்	ர க்ஷ	

இதன் பொருள் :—

பல்லவி

ஆறுமுகனை (மக்களை உய்விப்பதற்காக) அவதரித்தவனும், சக்திஸ்வரூபனும், (ஆன) ஸ்ரீ முருகக்கடவுள், என்னைக் காத்து அருள்புரிவானாக.

அநுபல்லவி

வள்ளி, தேவஸேனை (தெய்வயானை) இவர்களுடன் விளங்குவோனும், பிரமன் முதலிய தேவர்களுக்குத் தத்வோபதேசம் செய்தவனும், இந்திரன் முதலிய தேவர்களால் வணங்கப்படும் பாதங்களை யுடையவனும், மங்களகரமான விபூதி ப்ரஸாதத்தை (ஐசுவரியம்) அளிப்பவனும் (ஆன) (முருகப்பெருமான் என்னைக் காப்பாற்றட்டும்.)

சரணம்

பலகோடி சூரியர்களுக்கு, ஒப்பான காந்தியை யுடையவனும், பரமசிவனது உத்தம புத்திரனும், (மக்களுக்கு) நன்மையைச் செய்பவனும், பராக்கிரமமுள்ள தாரகன் முதலிய அசுரர்களை யழித்தவனும், பிரசித்திபெற்ற கணேசனது இளையோனும், (ஆறு அக்ஷரங்களுள்ள) 'ஷடக்ஷர' மந்திரத்தால் தியானிக்கப் படுவோனும், நீண்ட ஆயுளை யளிப்போனும், பக்தர்களுக்கு 'கல்பதரு' போன்று கோரும் வரங்களை யளிக்க வல்லவனும், 'சங்காபிஷேகம்' முதலியவற்ருல் உபசரிக்கப்படுவோனும், அரசர்களால் பூஜிக்கப்படுவோனும், அழகிய ஆடைகள் அணிந்தவனும், (தன்னைச் சேர்ந்த) நவ வீரர்களுக்கும் ஆனந்தத்தை யளிப்பவனும், ஈசனுக்கு ப்ரணவத்தின் பொருளை உபதேசம் செய்ததால் குரு ஆனவனுமான முருகக்கடவுள், என்னைக் காப்பாற்றட்டும்.

ஸ ரி க ம ப த நி ஸ்
ஸ் நி த ப ம க ரி ஸ } 8-வது மேளம்

பல்லவி

✝	●		✝	●	
ஸா ;	ரி ஸ ரி நி	|	நி தா ,	நீ ஸ ரி	‖
யோ .	மா . . ம்		ர . .	க்ஷி து .	
✝	●		✝	●	
ரி ஸா ,	ரி ஸ ரீ நி ரி	|	ஸ நி தா ;	நீ ஸ ரி	‖
யோ . .	மா . . . ம்		ர . . .	க்ஷி து .	
✝	●		✝	●	
த ம க ரி	ரி ஸ ரீ நி ரி	|	ஸ நி தா ;	நீ ஸா	‖
யோ . . .	மா . . . ம்		ர . . .	க்ஷி து	
✝	●		✝	●	
மா ;	மா ம த	|	த ம க ம	க ரி ஸ ரி	‖
ர .	ச . .		க் தி . ரு .	. . ப .	
✝	●		✝	●	
ஸ் நி த ம	ம க ரி ஸ ரி	|	ஸ நி தா ;	நீ ஸா	‖
யோ . . .	மா . . . ம்		ர . . .	க்ஷி து	
✝	●		✝	●	
ஸ்ா ;	ஸ் நி த ம	|	கா ம த மா	க ரி ஸ ரி	‖
ர .	ச . . .		க்தி ரு . .	. . ப .	
✝	●		✝	●	
ஸா ;	; ;	|	; ;	; ;	‖
து .	. .		. .	. .	

அநுபல்லவி

\+ 1 2 3
பா ; ப க மா ; நீ தா , ம |
பா . ஸ . மா . ன வ ல் லீ
4

\+ 1 2
த பா , ப த நி த ப த நீ தா , நி த தா ம மா |
பா . . ர . தீ . . . . சா . . . தி
4 3

\+ 1 2 3
ஸா ஸ ம க ம தா த ம த நி த நி ஸா |
வா ஸ வா . தி வ ந்தி த சு ப ச ர ணே
3 3 4

சரணம்

\+ 1 3
1. மா மா மா ; மா க ரி ரீ ; கா |
ச த கோ . டி பா . . . . ஸ்க
4

\+ 1 3
2. மா மா கரீ க மா ம க க ரி ரீ கா |
ச த கோ . , டி . பா . . ஸ்க
4

\+ 1 2 3
3. மா மா மா , த நி த த ம ம க க ரி ரீ கா |
ச த கோ . . . . டி . பா . , . . ஸ்க
4

\+ 1 2 3
ஸா ரீ ஸா ஸ த நீ ஸா ; ஸா |
சி . ஷ்ட சி . தி க ண டா
2

\+ 1 2 3
த ப தா ; தா தா க்ா ரீ ஸ்ா |
ப்ர . தா . ப தா . ர கா

\+ 1 2 3
ரீ ஸ்ா நீ த க் க் ரீ , நீ ; |
ப்ர ப ல க . ணே . . சா .
3 3

\+ 1 2 3
ரீ ரீ ஸ் , நி ஸ் த , நி த ம க ரி ஸா |
ச தா யு: . ப்ர த ப . க்த ம ந் தா . ர:
3 4

\+ 1 2 3
க ம க ம த ம த நி ஸ்ா , ஸ் , ரீ க்ா |
க்ஷி தீ . ச பூ . ஜி த தி . வ்யா ம் ப ரோ
3 3

வெளி வந்துவிட்டது! விலை ரூ. 2.

ரஞ்சன் எழுதிய "மாப்பிள்ளை வேட்டை"

அநுபல்லவி

+	●	+	●	
; ம ப	, க மா	த ப தா	பா ;	‖
. தே .	. . வ	ஸே . .	ஞே .	
3				
ம க ரி ஸ	ரி நி ஸா	, ரி கா	மா ;	‖
த . . .	த்வ . போ	. . த	ஞே .	
	3	4		
த நி ஸ் த	க்ா ரீ நி	த ம த நி	த ம க ரி	‖
ப . த்ர வி	பூ தி .	ப்ர தா . ன	நி பு ண .	
4 3	4	3		

("ஸ்ரீ ஸுப்ரம்மண்யோ")

சரணம்

+	●	+	●	
மா பா	; மா	; கா	ரி ஸ ரி க	‖
ர சோ	. பா	. க	ர: . . .	
	4			
மா ம க	பா மா	; ம க	ரி ஸ ரி க	‖
ர சோ .	. பா	. க .	ர: . . .	
	4			
மா ம க	தா மா	; ம க	ரி ஸ ரி நி	‖
ர சோ .	; பா	. க .	ர: . . .	
	4			
, ரி கா	மா ப க	மா ப த	ம பா ,	‖
. . த்ம	ஜ: சி .	வ க .	ர: . .	
; ரீ	நீ ஸ்ா	த நீ த	தா க் ரீ ரீ	‖
. தி	ஹ ர	தீ . .	ர: . . .	
3		4		
தா நீ	க ம நி த தா	; த நி	க் ரீ ரீ ;	‖
நு ஜ	ஷ . ட . .	. க்ஷ .	ர:	
	3			
ரி ஸ ரீ	ஸ நீ ஸ	, நி த நி	, நி ஸ ரி	‖
ச ங் கா	பி ஷே கா	. த்யு ப சா	. ர: . .	
2	4	3		
ம க் ரீ	ரீ நி ரீ க்ா	ரீ நி த ம	க ரி நி ரி	‖
ந வ வீ	ரா . . ன	ந் த வ ர	கு ரு கு ஹ	
		3	3 3	

("ஸ்ரீ ஸுப்ரம்மண்யோ")

வெளி வந்து விட்டது!

"நாடகம் ஒரு யோகம்" — ப்ரொபஸர் R. ஸ்ரீநிவாஸன் அவர்கள் எழுதியது.

விலை அணு நான்கு.

கிடைக்குமிடம் :— 'நாட்டியம்', 49, கதீட்ரல் போஸ்டு, சென்னை - 6.

கேரள நடனம்

கோபிநாத்

16. **வர்த்த மானகம்:**—நிமிர்ந்து பின்புறம் வளைந்த கட்டை விரலை நோக்கியபடி ஒவ்வொரு



15. **ஸர்ப்ப சிரஸ்:**—விரல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, உட்புறம் வளைய, உள்ளங்கை நன்கு குழிந்திருந்தால் 'ஸர்ப்ப சிரஸ்' எனும் ஹஸ்தமாகும்.



விரலும் தனித்தனியே வளைந்து மடிந்தால் 'வர்த்த மானகம்' எனும் ஹஸ்தமாகும்.

17. அராளம் :—பக்கத்தில் அணைந்த கட்டை விரலுடன் சேர்ந்தபடியே ஆள்காட்டு விரல் முன்புறம் நீண்டு சாய, ஏனைய விரல்கள் தனித்



தனியே கட்டை விரலை நோக்கி வளைந்து மடிந்தால் 'அராளம்' எனும் ஹஸ்தமாகும்.

20. முகுரம் :—உட்புறமாக வளைந்த நடுவிரலும் மோதிர விரலும் கட்டை விரலின் நுனி

யைத் தொட்டது போலிருக்க ஏனைய விரல்கள் நிமிர்ந்திருந்தால் 'முகுரம்' எனும் ஹஸ்தமாகும்.

குறிப்பு :—சிலர் நடு விரலும், மோதிர விரலும் உட்புறம் நீண்டிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

18. ஊர்ணநாபம்: நுனி மட்டிலும் உட்புறம் வளையும்படி எல்லா விரல்களும் விரிந்து தனித்தனியாக இருந்தால் 'ஊர்ணநாபம்' எனும் ஹஸ்தமாகும்.

19. முகுளம் :— எல்லா விரல்களும் குவிந்து நுனி சேர்ந்திருந்தால் 'முகுளம்' எனும் ஹஸ்தமாகும்.

21. பல்லவம் :—உட்புறம் சற்றே சாய்ந்திருக்கும் மோதிர விரலின் அடி ரேகையைக் கட்டை விரலின் நுனி உட்புறம் வளைந்து தொட, ஏனைய விரல்கள் சேர்ந்து நிமிர்ந்திருந்தால் 'பல்லவம்' எனும் ஹஸ்தமாகும்.



22. த்ரிபதாகம் :— விரல்கள் யாவும் சேர்ந்து நிமிர்ந்திருக்க, கட்டை விரலும் ஆள் காட்டு விரலுடன் பக்கத்தில் சேர்ந்திருந்தால் 'த்ரிபதாகம்' எனும் ஹஸ்தமாகும்.



23. ம்ருக சீர்ஷம் :— உட் புறம் சேர்ந்து நீண்டு சாய்ந்த நடுவிரல், மோதிர விரல் இவைகளின் நடு ரேகையை கட்டை விரலின் நுனிபடும்படியாக அமர, ஏனைய விரல்கள் நிமிர்ந்திருந்தால் 'மிருக சீர்ஷம்' எனும் ஹஸ்தமாகும்.



24. கடகா முகம் :— கட்டை விரலின் நுனி, நடு விரல் மோதிர விரல் இவைகளின் இடையாக வெளித் தெரிய, ஏனைய விரல்கள் உட்புறம் சேர்ந்து மடிந்து கட்டை விரலை மறைத்திருந்தால் 'கடகாமுக' ஹஸ்தமாகும்.

குறிப்பு :—ஆள்காட்டு விரலும் நடுவிரலும் சேர்ந்து வளைந்து கட்டை விரலின் மேலாக அமர மோதிர விரல் சற்றே உட்புறம் சாய்ந்திருக்க, சுண்டு விரல் நிமிர்ந்திருந்தால் கடகா முகம் எனும் ஹஸ்தமாம் எனக் கூறுவாரும் உளர்.

உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள்)

1. சின்னஞ்சிறு வயதிலேயே நல்ல சாரீர வசதி பெற்றிருந்த ஸ்ரீ வெங்கட்டராமய்யர் முதல் முதல் வெளிவந்த கோஹர் ஜான், பீராசாகிப் ஆகியோரின் ஹிந்துஸ்தானி இசைத்தட்டுகளைப் பெரிதும் ரஸித்தார். இவ்விசைத் தட்டுக்களில் அமைந்திருந்த அபாரமான பிர்க்காப் பொழிவுகளையும், ரவை ஜாதி வேலைப் பாடுகளையும் அப்படியே திருப்பிப் பாடும் ஆற்றல் அவருக்கு இருந்ததால் அவரது பெயரோடு 'பிளேட்' என்ற அடை மொழியும் சேர்ந்தது.
2. முழவு.
3. விசுவநாதய்யரின் குரு உமையாள்புரம் சுவாமி நாதய்யர். சுவாமிநாதய்யரின் குருக்கள் மஹா வைத்திய நாதய்யர், உமையாள்புரம் கிருஷ்ணபாகவதர், சுந்தரபாகவதர். கடைசி இருவரின் குரு ஸ்ரீ தியாகய்யர்.
4. சச்சத்புடம், சாசபுடம் என்பவை; சச்சத்புடம்எட்டு அக்ஷர காலங்கொண்டது. 1, 3, 5, 6- அக்ஷரங்களில் தட்டு, 2, 4, 7, 8- இவைகளில் வீச்சு, ஆறு அக்ஷரங்கொண்ட சாசபுட தாளத்தில் 1, 3, 4, 5- இவைகளில் தட்டு; 2, 6- அக்ஷரங்களில் வீச்சு.
5. நாட்டிய மாடுபவர் கையினல் காட்டும் (ஜாடை) சைகை **முத்திரை**யாகும். இடுப்பிற்குக் கீழ் பாதம் வரை ஏற்படும் அசைவுகள் **சாரி** எனப்படும். முத்திரையும் சாரியும் சேர்ந்தது **கரணம்** ஆகும். பலகரணங்கள் சேர்ந்தது **அங்கஹாரம்**.
6. பன்னிரண்டாவது வயதில் கல்லிடைக் குறிச்சியில் திருவாவடுதுறை ஆதீன மடத்தில் பல வித்வான்களுக்கிடையில் பாடியபோது.
7. முறையே பண், அலகு, இசை, பாலை என வழங்கப்படுகின்றன.
8. ரகுநாத நாயக்கர் 'ஸங்கீதஸுதா' என்ற நூலின் ஆசிரியர். ஸஹாஜி ராஜா (1686-1711) 'ராகலக்ஷணம்' என்ற நூலையும், திருவாரூர் தியாகராஜப் பெருமான் மீது நூற்றுக்கணக்கான பாடல்களையும் இயற்றியுள்ளார். சதுர் தண்டி ஸாஹித்தியங்களையும் சேகரித்து வைத்துள்ளார். இவரது சகோதரர் துளஜா மஹாராஜா இயற்றியுள்ள நூல், 'ஸங்கீத ஸாராம்ருதம்' ஆகும்.
9. தோ (Do), ரே (Ray), மீ (Me), பா (Fah), ஸோ (Soh) லா (La), ஸே (Si)

For
FINE
Photography

"நாட்டியமே"
சான்று.

Consult
G. K. VALE
MOUNT :: ROAD.

எமது
புகைப் படங்கள்
தனிச் சிறப்பு வாய்ந்தவை

ஜி. கே. வேல் & கோ
மவுண்ட் ரோடு
சென்னை.

"நாட்டியம்" காரியாலயத்திலிருந்து

வெளிவரும் புத்தகங்கள்.

1. நாடக யோகம் (வெளிவந்து விட்டது)
ஆசிரியர் "ப்ரொபஸர் R. ஸ்ரீநிவாஸன்"

2. நாட்டிய வரலாறு ஆசிரியர் "ரஞ்சன்"
நாட்டியத்தின் முதல் மூன்று மணிகளில் வெளிவந்த இந்நூலைப் பல நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்கி அனைவருக்கும் கிடைக்கும் வகையில் தனிப் புத்தக வடிவில் வெளியிடுகின்றோம்.

3. கலைஞர்கள் வரலாறு ஆசிரியர் "துரையப்ப பாகவதர்
இந்நூல் கால க்ஷேபக் கலையைப் பற்றியும், பல காலக்ஷேப பாகவதர்களின் வரலாற்றைப் பற்றியும் விரிவாகக் கூறும்.

4. பிடில் பிறந்த கதை ஆசிரியர் "ரஞ்சன்"
பிடில் இந்தியாவிலே தான் முதன் முதலில் தோன்றியது என்பதைப் பலரும் அறியார். இந்நூலில் பிடில் இந்தியாவில் தான் முதன் முதலில் தோன்றிய தென்பதும், பிறகே மேனாடுகளில் பரவலாயிற்று என்பதும் மிக விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

5. பரத சூடாமணி (எட்டுப் பிரதியின் பதிப்பு)
இந்நூலில் விரிவாக ஹஸ்த லக்ஷணங்களும், ஹஸ்தப் பிரயோகங்களும் கூறப்பட்டிருப்பதால் நாட்டியம் பயில்வோருக்கு மிகவும் பயன்படும் என்பது எமது துணிபு.

மற்றும் தியாகராஜஸ்வாமி சரித்திரம், முத்துஸ்வாமி தீக்ஷிதர் சரித்திரம் முதலிய பல சிறந்த நூல்கள் ஒவ்வொன்றாகப் பிரதி மாதம் வெளிவரும்.

"சாஸ்திரீய ஜோதிஷம்"

★

லக்ஷக் கணக்கான ஜனங்கள் எங்கள் உண்மையான பலனைக் கேட்டு மிக்க ஸந்தோஷமடைகிறார்கள்.

★

ஒரு ஜாதகம் கணிக்க	ரூ. 3 0 0
எதிர்கால கேள்வி 3க்கு	ரூ. 2 0 0
ஒரு வருஷ மாதவாரி பலன்	ரூ. 5 0 0
பொதுப் பலன் எழுத	ரூ. 10 0 0
புக்திவாரி ஆயுள்வரை எழுத	ரூ. 25 0 0
ஆயுள்வரை புக்தி பலன்	ரூ. 50 0 0

ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

ஜோதிஷ ரத்னம் பண்டிட் M. R. K. மூர்த்தி,

148, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், மதருஸ்.

கந்தர்வ கானாலயம்

சிறுவர் சிறுமிகளுக்கு

வாய்ப்பாட்டு

வீணை

பிடில்

ஹிந்தி

ஆகியவைகளில் ஒன்றரை வருஷ காலமாகச் சிறந்த பயிற்சி அளித்து வருகிறது.

★

29, பிள்ளையார் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி.

பாஷ்யம் சங்கீத கலாசாலை

மாணவிகளுக்கு வாய்ப்பாட்டு, வீணை பிடில், பரத நாட்டியம், முதலியவை களில் சாஸ்திரோக்தமான கர்னாடக சங்கீதப் பயிற்சி யளித்து வருகிறது.

இத்துடன் கவர்ன்மெண்ட் பரீக்ஷை களுக்கும், பள்ளிக்கூடங்களில் சங்கீத ஆசிரியர்களாகச் செல்ல விரும்புவோ ருக்கும் பயிற்சி யளித்து அனுப்பப் படும்.

கலாசாலையில் வீணை, பிடில், முதலிய இசைக் கருவிகளும் அமைக்கப்பட் டுள்ளன.

நேரம்: காலை 7 முதல் 9 மணிவரை

C. B. SRINIVASAN,
Principal.

48. ஸெண்டு ஜேவியர் தெரு, ஜி. டி. மதராஸ்.

Edited & Published by RANJAN B. A., M. Litt. Cathedral Post, Madras. 6.
Printed by D. K. Swamy at the Rajan Electric Press, 7, Sunkurama Chetty Street, G. T. Madras-1